
# கவிச்சரம்

இதழ் 5



வெளியீடு

கனடா தமிழ்க் கவிஞர் கழகம்

தை 2025

ஜனவரி 26, 2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிச்சரம்

## இதழ் 5

**கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்**

**கவிச்சரம் இதழ்க் குழு**

கவியாசான் பாவலர் மாவிலி மைந்தன்

சி. சண்முகராஜா (இதழாசிரியர்)

பாவலர் சுகந்தி மார்க்கண்டு

பாவலர் அம்பிகா வாசுதேவன்

**வெளியீடு**
**கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்**

**தை 2025**
**(January 26, 2025)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழினுள்ளே ...

(கவிஞர்களின் முதற்பெயரின் அகரவரிசைப்படி கவிதைகள் நிரைப்படுத்தப்பட்டுள்ளன.)

1. இதழாசிரியரின் இதயத்திலிருந்து........! - கவியாசான் மாவிலி மைந்தன் சி. சண்முகராசா

2. தலைவரின் சிந்தனையிலிருந்து........! - பாவலர் குமரகுரு கணபதிப்பிள்ளை, தலைவர், கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்

3. கழகச் செயலாளரிடமிருந்து........! - பாவலர் பவானி தர்மகுலசிங்கம், செயலாளர், கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்

4. வாழ்த்துரை - செந்தமிழ்ப் பேரொளி பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி

5. வாழ்த்துரை - எழுத்தாளர் சிந்தனைப் பூக்கள் பத்மநாதன்

6. அணிந்துரை - பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

7. கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களுக்கு இதய அஞ்சலி - பாவலர் குமரகுரு கணபதிப்பிள்ளை, தலைவர், கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்

8. அமரர் பாவலர் அருட்கவி ஞானகணேசன் தம்பிஐயா நினைவலைகள் - பாவலர் அகணி சுரேஸ், கனடா

9. தாய்மொழி முத்தமிழ் செந்தமிழ்த் தேனே! ஆனந்தக் களிப்பு - பாவலர் அகணி சுரேஸ், கனடா

10. சிவபூமி நாடி - பாவலர் அம்பிகா வாசுதேவன், அமெரிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. என்னோவியம் - தேசபாரதி பாவலர் வே. இராசலிங்கம், கனடா

12. கவியாசான் கவிநாயகர் கந்தவனம் - பாவலர் இராஜ்மீரா இராசையா, கனடா

13. அறிவினைப் பெருக்கிடு - கவிஞர் இறாஜினி சுபாகரன், கனடா

14. கலியாண்டுச் சிறப்பு - பாவலர் கனி விமலநாதன், கனடா.

15. கண்ணீரில் தோய்ந்த கதை - பாவலர் க.குமரகுரு, கனடா

16. தாகத்திற்கு என்ன பதில்-குறிஞ்சிக்கவி சி. கி. ஆனந்தன், கனடா

17. எண்திசையும் உனதே! - கவியாசான் மாவிலி மைந்தன் சி. சண்முகராசா, கனடா

18. மறைமலை அடிகள் - பாவலர் சோக்கெல்லோ சண்முகநாதன், கனடா

19. பெண்ணெனும் பேராற்றல் - பாவலர் மார்க்கம் சந்திரன், கனடா

20. மண்மடியில் கண்ணுறங்கும் மன்னவர்கள் - கவிஞர் மானியூரான் சயந்தன் பசுபதி, கனடா

21. நான் மகிழ்ந்த கிராமியம் - பாவலர் சுகந்தி மார்க்கண்டு, கனடா

22. அழகிய தமிழே! - கவிஞர் செல்வி **மயில்வாகனம்**, கனடா

23. மனம் - கவிஞர் தில்லைராணி பாலேஸ்வரன், கனடா

24. மழைநாள் - கவிஞர் - தேவகி விக்னேஸ்வரன், கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. தமிழின் பெருமை - கவிஞர் நாகேஸ்வரி சிவகுருநாதன், கனடா

26. திருமுறையே தமிழ் வேதம் - பாவலர் கந்த . ஸ்ரீ பஞ்சநாதன், கனடா

27. மானுடனே கேள்! - பாவலர் பவானி தர்மகுலசிங்கம், கனடா

28. தமிழே உன் நினைவே! - கவிஞர் புவனா கருணாகரன், அமெரிக்கா

29. பாரதியைப் போற்றுவோம் - பாவலர்மணி முனைவர் புட்பா கிருட்டிடி, கனடா

30. தமிழீழச் சிறப்பு-பாவலர் மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை, கனடா

31. திருமூலரின் தத்துவ முத்துக்கள் - வெண்பாப் புலவர் முருகேசு மயில்வாகனன், கனடா

32. பசுமை வளம்பெற வேண்டும் - கவிஞர் மைதிலி தயாபரன், இலங்கை

33. உழவனின் உளத்தோடு - கவிஞர் வாணிதாசன், கனடா

34. தனிமை - கவிஞர் விமலாதேவி புஸ்பநாதன், கனடா

35. பட்டாம் பூச்சி - கவிஞர் ஹேமா சுஜானந், கனடா

36. கட்டுரை - இரா. சம்பந்தன், கனடா

37. சிறுகதை - கலைந்திடும் கனவுகள் - கணபதிப்பிள்ளை விக்னேஸ்வரன், கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து........!

காலமென்னும் கடிகாரமுள்ளின் அசைவோடு சேர்ந்து உலகியல் மாற்றங்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. இந்தத் தொடர் மாற்றத்துக்கு மத்தியிலும் ஒரு இனத்தினது பெருமைக்குரிய பண்டைய விழுமியங்களும் பண்பாடுகளும் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு மரபு ரீதியாக எடுத்துச் செல்லப்பட்டுப் பாதுகாக்கப் படுகின்ற வரலாறும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

தமிழ் இனத்தைப் பொறுத்தவரை அந்த இனத்தின் மரபுகள் காலமென்னும் ஆழியிலும் காற்று மழை ஊழியிலும் அழிந்துவிடாது பாதுகாக்கப்பட்டுக் காலங்களையும் கடந்து வாழுகின்ற சிறப்பைப் பார்க்கின்றோம். இந்த வகையிலேயே தமிழ் இலக்கிய வரலாறும் எத்தனையோ காலமாற்றங்களை ஏற்றுக்கொண்டு பயணித்து வந்தாலும் அதன் பண்டைய மரபு சார்ந்த கருவூலங்கள் அழிந்துபடாமல் தொடர்ந்து வரும் தலைமுறைகளுக்கு எடுத்து வரப்பட்ட காரணத்தாலேயே தமிழ் மொழி செம்மொழி என்ற அங்கீகாரத்துடன் சிறந்து மேலோங்கி நிற்கிறது.

நவீன அலை சூறாவளியாக வீசுகின்ற இன்றைய கால கட்டத்தில் மரபைப் பேணிப் பாதுகாக்கின்ற சமுதாயப் பொறுப்பின் தொடர்ச்சியாக மரபு இலக்கியங்களை வளர்க்க வேண்டியதும், வாழ வைக்க வேண்டியதும் இன்றைய தலைமுறைக்கு இன்றியமையாத கடமையாக இருக்கிறது. இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கிய, இலக்கண வளங்களுடன் கூடிய மொழியாகத் தமிழ் மொழி விளங்கியதற்கு அடையாளமாகச் சொல்லியல், எழுத்தியல் ஆகியவற்றுடன் வேறெந்த மொழியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதவகையில் பொருளியலையும் உள்ளடக்கிப் படைக்கப்பட்ட இலக்கண நூலாகத் தொல்காப்பியம் விளங்குகிறது. காலத்துக்குக் காலம் தமிழன்னை பெற்றெடுத்த அறிஞர் பெருமக்கள் மேற்கொள்கின்ற பெருமுயற்சியால் தொல்காப்பிய மரபில் தோன்றிய கவிதை வடிவங்கள் காலச் சுழியில் அமிழ்ந்து போகாமல் இன்றும் நிலைபெற்று வருவதைக் காண்கின்றோம்.

இந்த வரலாற்றுத் தொடர்ச்சியாக, தமிழர்கள் உலகெங்கும் சிதறுண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் மரபுக்கவிதைகள் அவற்றின் அழகிய யாப்பிலக்கணக் கூறுகளுடன் வேரூன்றி விருட்சமாக வளர்வதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சி பல நாடுகளிலும் மேற்கொள்ளப்படுவது பாராட்டுக்குரியது. குறிப்பாகப் பெருமளவு தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழுகின்ற கனடிய மண்ணில் அண்மைக்காலமாக இந்த முயற்சி வெற்றிகரமாகவே மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஆசான்கள் கவிநாயகர் கந்தவனம், பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் இருவரினதும் வழிகாட்டலுடன் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தால் நடத்தப் பெற்ற கவிதைப் பயிற்சிப் பட்டறையில் உருவாகிய கவிஞர்களின் ஒன்றிணைப்பினால் **2011**ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் தோற்றம் பெற்றதும் இந்த வளர்ச்சிப் பரிணாமத்தில் முக்கியமானதொரு வரலாற்றுப் பதிவாகும். கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் தோற்றம் பெற்றதிலிருந்து மரபுக் கவிதையின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான மேலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சனிக்கிழமை தோறும் கவிதைப்பயிலரங்கம் தொடர்ந்து நடத்தப்படுவதும் அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையில் ஆர்வமுள்ளவர்கள் இணைந்து கொள்வது தொடர்வதும் மகிழ்ச்சி தருகின்றது.

இந்தப் பயிலரங்கத்தில் தொடர்ந்து இணைந்து கொள்கின்றவர்கள் பலரும் தமிழ்த்துறையைப் பின்புலமாகக் கொண்டிருப்பவர்களோடு, மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம், வணிகம், கணினியியல், மொழியியல், மெய்யியல் என வெவ்வேறு துறைகளில் நிபுணத்துவம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் தமிழ் மீதும், கவிதை இலக்கியத்தின் மீதும் கொண்ட அளவற்ற காதலினால் ஈர்க்கப்பட்டே கவிஞர்களாக உருவாகி வருகின்ற பான்மை பெருமை தருகின்றது. இந்த வகையில் கனடிய மண்ணில் மெதுவாக ஆனால் வலுவாக மரபுக்கவிஞர்கள் பரம்பரையொன்று உருவாகி வளர்ந்து வருகின்ற வரலாற்றை இன்று கண்கூடாகக் காண்கின்றோம். இந்தப் பெரும்பணியில் எனது ஆசான்கள் பண்டிதர் ம. செ. அலெக்ஸ்சாந்தர், கவிநாயகர் கந்தவனம் ஆகிய இரு ஆளுமைகளுக்குப் பின்னர் அவர்களது வழித்தடத்தில் கவிதை பயிற்றும் ஆசானாக, ஒரு அகல்விளக்காக இருக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது மிக்க மகிழ்ச்சி தருகிறது.

இக்கவிதைப் பயணத்தில் 2024ஆம் ஆண்டு எமது ஆசான் கவிநாயகர் கந்தவனம் அவர்களினதும், கழகத்தின் தொடக்ககால உறுப்பினரும் முன்னாள் தலைவருமான பாவலர் அருட்கவி ஞானகணேசன் அவர்களினதும் மறைவானது பேரிழப்பாக அமைந்துவிட்டதையும் மிகுந்த துயரத்துடன் பதிவுசெய்கிறேன். இருவரையும் நினைவு கூர்ந்து இவ்விதழுக்கு நினைவேந்தல் கட்டுரை வழங்கிய பாவலர் குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், பாவலர் அகணி சுரேஸ் அவர்களுக்கும் உளமார்ந்த நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுக் கவிதைக்கு முதன்மைத்துவம் கொடுக்கப்படுவதுடன் ஏனைய கவிதை இலக்கிய வடிவங்களையும் உள்ளடக்கியதாகக் காலாண்டுக்கு அல்லது அரையாண்டுக்கு ஒரு முறை இலக்கிய இதழ் ஒன்றை வெளியிடுவது என்பதைக் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் தனது முக்கிய செயற் திட்டங்களில் ஒன்றாக யாப்பு வரைவில் ஏற்றுக்கொண்டிருந்தது. ஆனாலும் நடைமுறைச் சிக்கலால் அத்திட்டம் வெற்றிபெறவில்லை.

எனினும் ஆண்டுக்கொரு முறையாவது கவிச்சரத்தினை வெளியிடுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தோடு **2016**ஆம் ஆண்டு தைமாதம் எமது கழகத்தால் நடத்தப்பெற்ற தைப்பொங்கல் - தமிழ்மரபுத் திங்கள் விழாவின் போது முதலாவது வெளியீடாகக் 'கவிச்சரம்' என்ற பெயரில் கவிதைகள், கட்டுரைகள், சிறு கதைகள் அடங்கிய இதழை வெளியிட்டு வைத்தோம்.

எமது கழக உறுப்பினர்களினது சிறந்த ஆக்கங்களைக் கொண்டிருந்த முதலாவது கவிச்சரம் இதழ், வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருந்ததும் குறிப்பிடத் தக்கது.

இரண்டு ஆண்டு இடைவெளியின்பின் இரண்டாவது கவிச்சரம் இதழ் **2019**ஆம் ஆண்டு தை மாதம் நடைபெற்ற கழகத்தின் தைப்பொங்கல் - தமிழ்மரபுத் திங்கள் விழாவின் போது வெளியிடப்பட்டது. அத்துடன் கனடாவின் 150ஆவது ஆண்டு நிறைவையொட்டிய சிறப்பு இதழாகவும் அது வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. மூன்றாவது இதழைக் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக **2020**ஆம் ஆண்டு மெய்நிகர் வழியாக வெளியிட்டு வைத்தோம். நான்காவது இதழ் 2023ஆம் ஆண்டு மார்கழி மாதம் வெளியிட்டு வைக்கப்பட்டது. அந்த விழாவிலே யாப்பிலக்கணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயின்று மரபுக்கவிதையில் கால் பதித்த கவிஞர்கள் ஐவருக்குப் பாவலர் விருது வழங்கப்பட்டதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இப்போது, கவிச்சரம் ஐந்தாவது இதழ் 2025ஆம் ஆண்டு தை மாதம், கனடாத் தமிழ்க் கவிஞர் நடத்தும் தைப்பொங்கல் - தமிழ் மரபுத்திங்கள் விழாவிலே வெளியிடப்பெற்று உங்கள் கைகளில் விரிகின்றது. இவ்விதழில் வளர்ந்த கவிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரது ஆக்கங்களுடன், வளர்ந்து கொண்டிருக்கும் கவிஞர்களினதும், பயின்று கொண்டிருக்கும் மாணவர்களினதும் ஆக்கங்களும் இடம்பெற்றிருக்கின்றன. மரபுக்கவிதைக்கு முதன்மை கொடுக்கப்பட்டிருந்தாலும் இக்கால நவீன கவிதை வடிவங்களையும், கட்டுரை, சிறுகதை ஆகிய ஆக்கங்களையும் வரவேற்று, அவற்றிற்கும் இவ்விதழில் இடமளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வகையில், வளர்ந்துவரும் கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் ஊக்குவிப்பதுடன் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் கவிச்சரம் ஒரு தளமாக அமைந்து வருகிறது என்பதை உறுதியாக நம்புகிறேன்.

கவிச்சரம் ஐந்தின் இதழாசிரியர் பொறுப்பை எனக்களித்து, இப்பணியைத் தொடர்வதற்கு வாய்ப்பைத் தந்து, வேண்டிய ஆதரவுகளையும் அளித்த கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத் தலைவர் பாவலர் குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்கள் உள்ளிட்ட அத்துணை செயற்குழு உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விதழுக்கு அணிசேர்க்கும் வண்ணம் தலைமையுரை வழங்கிய கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத் தலைவர் பாவலர் குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், செயலாளர் உரை வழங்கிய கனடாத் தமிழ்க் கவிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்தின் செயலாளர் பாவலர் பவானி தர்மகுலசிங்கம் அவர்களுக்கும், சிறப்பானதொரு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த மூதறிஞர் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்த பேராசிரியர் முனைவர் இளையதம்பி பாலசுந்தரம் அவர்களுக்கும், எழுத்தாளர் சிந்தனைப்பூக்கள் பத்மநாதன் அவர்களுக்கும் உளங்கனிந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

அச்சுப்பிழைத் திருத்தங்களைச் செய்து உதவியதோடு, இதழின் நேர்த்தியான உருவாக்கத்துக்கு எனக்குத் துணைநின்ற இதழ்க் குழு உறுப்பினர்களான பாவலர் சுகந்தி மார்க்கண்டு அவர்களுக்கும், பாவலர் அம்பிகா வாசுதேவன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

இப்பணி முழுமையாக நிறைவேறுவதற்குக் குறுகிய காலத்துக்குள் தங்கள் படைப்புகளை வழங்கியிருந்த கழக உறுப்பினர்களுக்கும், ஏனைய கவிஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். வேண்டிய நிதியுதவி செய்த கழக உறுப்பினர்களுக்கும், வர்த்தகப் பெருமக்களுக்கும், இதழை அழகுற அச்சு வடிவமைப்புச் செய்து உதவிய பாவலர் அகணி சுரேஸ் அவர்களுக்கும், இவ்விதழை அழகிய நூலாக அச்சுப் பதிப்புச் செய்து வழங்கிய MultiSmart Solution பதிப்பகத்தாருக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இதழைப் படித்து மகிழுங்கள். குறைநிறைகளை அறியத்தாருங்கள்.

வாழ்க தமிழ் மரபு! வளர்க தமிழ் இலக்கியம்! உயர்க இலக்கியப் படைப்பாளிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பு நிறைந்த வாழ்த்துகளுடன்,

கவியாசான் மாவிலி மைந்தன் சி. சண்முகராசா RN, BSN, MA(Tamil)

இதழாசிரியர்

தை, 2025

ரொறொன்ரோ, கனடா

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தில் கவியாசான் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா அவர்களால் நடத்தப் பெற்றுவரும் யாப்பிலக்கணம், மரபுக் கவிதைப் பயிலரங்க வகுப்புகளில் இணைந்து கற்று மரபுக் கவிதைகள் படைக்கும் தகுதியையும், ஆற்றலையும் வளர்த்துக் கொண்டமைக்காகத் **திருமதி புவனேஸ்வரி கருணாகரன்** (அமெரிக்கா) அவர்களுக்கு, தமிழ் மரபுத் திங்கள் - கவிச்சரம் இதழ் 5 வெளியீட்டு விழாவின்போது **‘பாவலர்’** விருதும் அதற்கான சான்றிதழும் வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவரின் சிந்தனையிலிருந்து............!

தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு முதலியவற்றைக் கனடியத் தமிழர் மத்தியில் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமது தார்மீகக் கடமையாகும். பல்கலாச்சாரச் சூழலில் எமது தமிழ் மொழியும், பண்பாடும் நிலைபெற வேண்டும் என்ற உயரிய நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதே கனடியத் தமிழ்க் கவிஞர் கழகமாகும்.

எமது அன்புக்கும், பெருமதிப்புக்குமுரிய பேராசான்கள் கவிநாயகர் வி. கந்தவனம், பண்டிதர் ம. செ. அலெக்ஸ்சாந்தர் ஆகிய இருவருமே எமது கவிஞர் கழகத்தை ஆரம்பித்த பெருமைக்குரியவர்கள். அவர்கள் கழகத்தின் காப்பாளர்களாகவும், ஆசிரியர்களாகவும் பணியாற்றினார்கள். கழகத்தைச் சிறப்பாக வழிநடத்தியும், யாப்பிலக்கணம், பழந்தமிழ் இலக்கியம் முதலியவற்றைக் கற்பித்தும் கனடாவில் மரபுக் கவிஞர் பரம்பரையைத் தோற்றுவித்தார்கள். அவர்கள் விதைத்த விதையானது இன்று விருட்சமாக வளர்ந்து வருகின்றது. எமது இரண்டு ஆசான்களும் விட்டுச்சென்ற பணிகளை **"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்"** (குறள்:517) என்பதற்கமையக் கவி ஆசான் பாவலர் சி.சண்முகராசா அவர்கள் ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் தலைவர் பதவியைக் கவி ஆசான் பாவலர் சி சண்முகராசா அவர்கள் பொறுப்பேற்று மிகச் சிறப்பாக வழிநடத்தினார். அவரைத் தொடர்ந்து பாவலர் த. ஞானகணேசன், பாவலர் அகணி சுரேஸ், பாவலர் கந்தஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சநாதன் ஆகியோர் தலைவர்களாகச் செயலாற்றிக் கழகத்தை மேலும் வளர்த்த பெருமைக்குரியவர்கள்.

நான் தலைமைப் பொறுப்பேற்றுச் செயல்படத் தொடங்கிய மிகக்குறுகிய காலத்தில் இடம்பெற்ற எமது முன்னாள் தலைவர் அருட்கவி த.ஞானகணேசன், காப்பாளர் கவிநாயகர் வி.கந்தவனம் ஆகிய இருவரின் மறைவு எமக்குப் பேரிழப்பாக அமைந்தது. இருவரது மரணச் சடங்குகளைத் தொடர்ந்து, நாம் நடத்தத் திட்டமிட்டிருந்த தமிழ் மரபுத் திங்கள் விழாவை இரத்துச்செய்து, அமரர் ஞானகணேசன் அவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்ச்சியைத் தைமாதம் 28ஆம் திகதியும், கவிநாயகருக்கான நினைவேந்தல் நிகழ்ச்சியை வைகாசி மாதம் 19ஆம் திகதியும் மிகச் சிறப்பாக நடத்தி முடித்தோம்.


எமது கழகத்தின் முக்கிய செயற்பாடுகளாக உள்ளவை யாப்பிலக்கண வகுப்பு, கவியரங்கம், தமிழ் மரபுத் திங்கள் விழா, கவிச்சரம் வெளியீடு முதலியனவாகும். இவ்வாண்டுக்கான புதிய மரபுக் கவிதைப் பயிலரங்கமும் யாப்பிலக்கண வகுப்பும் கடந்த 2024-10-19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. வழமைபோல் கவி ஆசான் பாவலர் சி. சண்முகராசா அவர்கள் வாரம் தோறும் மிகச் சிறப்பாக மாணவர்களுக்குக் கற்பித்து வருகிறார். கடந்த காலங்களைவிட இந்த ஆண்டு 25க்கும் மேற்பட்ட மாணவர்கள் இணைந்துள்ளனர். கனடா, அமெரிக்கா, தமிழ்நாடு, இலங்கை, சுவிஸ் ஆகிய நாடுகளில் இருந்து மெய்நிகர் மூலம் கற்று வருகின்றனர். தமது வேலைப்பளுவுக்கு மத்தியில் மிகச் சிறப்பாக கற்பிக்கும் கவி ஆசான் சி. சண்முகராசா அவர்களுக்கு எனது பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆண்டு கனடா தினம், வாணி விழா, மாவீரர் நினைவேந்தல் ஆகிய மூன்று சிறப்பு நாள்களையொட்டிக் கவியரங்குகளை நடத்தியுள்ளோம். கவியரங்கத்தைத் தலைமையேற்றுச் சிறப்பாக நடத்திய பாவலர்கள் இராஜ்மீரா இராசையா, கந்தஸ்ரீ பஞ்சநாதன், சயந்தன் பசுபதி ஆகிய மூவருக்கும் ஆர்வத்துடன் பங்குபற்றிய கவிஞர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"கவிச்சரம்"** எமது கழகத்தின் வெளியீடாகும். இது கவிஞர்களின் ஆக்கங்களுக்கான தளமாகும். கவிச்சரம்-5 இன் ஆசிரியராக, எமது கழகப் பொருளாளர், கவி ஆசான் பாவலர் சி. சண்முகராசா அவர்கள் தனது பல வேலைப்பளுவுக்கு மத்தியில் சகல ஆக்கங்களையும் தொகுத்துச் சிறப்பான சரமாக எமக்கு தந்துள்ளார். அவருக்கும், ஆக்கங்களை வழங்கிய சகல கவிஞர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இறுதியாக எமது கழகத்தைச் சிறப்பாக வழிநடத்துவதற்கு எனக்கு ஆக்கபூர்வமான கருத்துக்களையும், உதவிகளையும் வழங்கிய அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**பாவலர் குமரகுரு கணபதிப்பிள்ளை (எம்.ஏ தமிழ்)**
தலைவர்
கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கழகச் செயலாளரிடமிருந்து.......!

புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் வளர்ந்து வரும் எமது பிள்ளைகளின் தமிழ் வளர்ச்சிக்காக உழைக்கின்ற அமைப்பாக எமது கனடாத் தமிழ்க் கவிஞர் கழகமானது திகழ்வதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதன் செயலாளராகக் கடந்த நான்கு ஆண்டுகளாகக் கடமையாற்றக் கிடைத்த பேற்றினையிட்டு மேலும் பேருவகையில் திளைக்கின்றேன்.

இக்கழகமானது எமக்கு யாப்பிலக்கண இலக்கியங்களைக் கற்பித்து வந்த எங்கள் பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய ஆசிரியர்கள் அமரத்துவமடைந்த கவிநாயகர் கந்தவனம் மற்றும் பண்டிதர் ம. செ. அலெக்ஸ்சாந்தர் ஆகியோரின் ஆலோசனைக்கேற்ப 2011ம் ஆண்டில் உருவானது. எமது உறுப்பினர்களின் அயராத உழைப்பினாலும், விடா முயற்சியினாலும் மிகக் குறுகிய காலத்தில், பெரும் விருட்சமாக வளர்ந்தோங்கி வருவதுடன், உலக நாடுகளில் மக்கள் வியந்து பேசப்படும் நிறுவனமாகவும் கவிஞர் கழகம் விளங்குகிறது.

எமது கழகத்தின் அச்சாணியாகத் திகழ்வது இங்கே நடத்தப்பட்டுவரும் மரபுக் கவிதை வகுப்பாகும். இவ்வகுப்பில் யாப்பிலக்கணம், இலக்கியம், மரபுக் கவிதை இயற்றும் முறை ஆகியவை கற்பிக்கப்படுகின்றன. அமைப்பின் தொடக்ககாலத் தலைவரும் ஆசானுமாகிய மதிப்புக்குரிய மாவிலி மைந்தன் திரு. சி. சண்முகராசா அவர்கள் தன்னை முழுவதாக அர்ப்பணித்து இவற்றைக் கற்பித்து வருகிறார். மெய்நிகர் (Zoom) வழியாக நடத்தப்படும் இவ்வகுப்புகளில் பல நாடுகளிலிருந்தும் மாணவர்கள் பங்கு பற்றிப் பயனடைகின்றனர்.

எமது அமைப்பானது கடந்த காலங்களில் பல்வேறு முன்னேற்றகரமான செயல்களை ஆற்றி வந்துள்ளது. இவ்வாண்டும் அவ்வண்ணமே இயங்கி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான தொழிற்பாடுகளுக்கு மூல காரணமாக, சிறந்த வழி காட்டிகளாக இருந்தவர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் ஆசிரியப் பெருந்தகைகளே. இன்று இவர்கள் எம்மத்தியில் இல்லை. இவர்களுடன், கழகத்தின் முன்னாள் தலைவரும், சிறந்த செயற்பாட்டாளருமாகத் திகழ்ந்த அருட்கவி ஞானகணேசன் அவர்களும் இணைந்துவிட்டார். இம்மூவருக்குமான அக வணக்கத்தைச் செலுத்தியவாறு, இக்கட்டுரையைத் தொடர்கிறேன்.

எமது கழகத்தின் இவ்வாண்டுக்கான செயற்பாடுகள் பின்வருமாறு:

1) 27. 12. 2023இல் இறைவனடி சேர்ந்த அன்புக்குரிய அருட்கவி ஞானகணேசன் அவர்களின் புகழுடம்பிற்கு மலர் வளையம் வைத்து வணங்கினோம். கழக உறுப்பினர்கள் சிலர் உரையாற்றினார்கள்.

2) 28. 01. 2024 அன்று இவருக்கான நினைவுநாள் நிகழ்ச்சியை ஸ்காபறோ குடிமை மையத்தில் நடத்தினோம்.

3) 11. 03. 2024இல் இறைவன் திருவடி பற்றிய அன்பிற்கும் வணக்கத்திற்குமுரிய ஆசான் கவிநாயகர் கந்தவனம் அவர்களின் புகழுடம்பிற்கு மலர் வளையம் வைத்து வணங்கியதுடன் வணக்கப் பாடலும் அச்சிட்டு வழங்கினோம். அமைப்பின் உறுப்பினர்கள் சிலர் வணக்க உரையாற்றினார்கள்.

4) 19. 05 .24 அன்று இவரது நினைவு நாளை ஸ்காபறோ குடிமை மையத்தில் நடத்தினோம்.

5) 16. 06. 2024 இல் தமிழாழி நிறுவனம் நடத்திய தந்தையர் கலைமாலை நிகழ்ச்சியில் எமது உறுப்பினர்களும் பங்கு பற்றிச் சிறப்பித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) 01. 01. 2024 அன்று கனடா பிறந்த நாளையிட்டுக் கழக உறுப்பினர்களுடன் வெளிநாட்டுக் கவிஞர்களும் இணைந்து மிகச் சிறப்பான முறையில் கவியரங்கம் செய்தனர்.

7) 24. 08. 2024இல் எமது கழக உறுப்பினர்களில் ஒருவரான சந்திரன் வேலாயுதம்பிள்ளை அவர்களின் நூல் வெளியீடு எமது அமைப்பின் ஆதரவுடன் இனிதே நடந்தேறியது,

8) 10. 10. 2024 அன்று கழகத்தினால் வாணி விழா மிகத்திறம்பட நடத்தப்பெற்றது. பல கவிஞர்கள் பங்குபற்றி நிகழ்ச்சியின் தரத்தினை மேன்மையுறச் செய்தனர்.

9) 23. 11 2024அன்று மாவீரர் நாளையொட்டி நடைபெற்ற கவியரங்கில் கழக உறுப்பினர்களுடன் பிற கவிஞர்களும் பங்கு பற்றினார்கள்.

10) 21. 12. 2024இல் நத்தார்ப் பண்டிகையையிட்டு நடத்தப்பட்ட கவியரங்கத்தில் எங்கள் கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

11) எமது கழக உறுப்பினர்கள் கிழமை தோறும் கீதவாணி வானொலியால் நடத்தப்படும் கவியரங்கங்களிலும் பங்கு பற்றி வருகின்றனர்.

எமது கழகம் இவ்வாண்டில் ஆற்றிய பணிகளில் ஒன்றாக இந்த ஐந்தாவது கவிச்சரம் வெளியிடப்படுகிறது. இவ்விதழை மிகவும் நேர்த்தியான முறையில் வெளியிட முன்னின்றுழைத்த இதழாசிரியர் மாவிலி மைந்தன் திரு. சி.சண்முகராசா அவர்களுக்கும் இதழ்க்குழு உறுப்பினர்கள் திருமதி சுகந்தி மார்க்கண்டு மற்றும் திருமதி அம்பிகா வாசுதேவன் ஆகியோருக்கும், எமது அமைப்பின் தலைவராக மிகவும் துடிப்போடும், திறனோடும் செயற்படும் திரு. குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் தமது ஆக்கங்களை உரிய நேரத்தில் எமக்கனுப்பி வைத்த கழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்களுக்கும், மற்றைய கவிஞர்களுக்கும் எமது அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கவிதை வகுப்பின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் உயர்ச்சிக்காகவும் மிகுந்த அக்கறையோடு முழு மூச்சாக நின்று கற்பிக்கும் எங்கள் ஆசான் மாவிலி மைந்தன் அவர்களுக்கும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் இவ்வகுப்பில் இணைந்து ஆர்வத்துடன் கல்விகற்கும் மாணவர்களுக்கும் கழகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது விழாக்களைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு அவ்வப்போது குடிமை மையத்தில் இடம் தந்து உதவும் ஸ்காபரோ மாநகர சபையினருக்கு என்றென்றும் எமது உள்ளம் நிறைந்த நன்றி உரித்தாகட்டும்.

மேலும் அவ்வப்போது எமது நிகழ்ச்சிகளில் தவறாது வருகை தந்து உரையாற்றிச் சிறப்பிப்பதோடு மட்டுமின்றி தனது இதழில் எமது விழாக்கள் பற்றிய அறிவித்தலை இணைத்து மக்கள் மத்தியில் கொண்டு செல்ல உதவி வரும் எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய உதயன் பத்திரிகை ஆசிரியர் ஆர். என் லோகேந்திரலிங்கம் அவர்களுக்கும் கழகத்தின் சார்பில் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவிச்சரம்-5 இதழுக்கான நிர்வாகசபை உறுப்பினரின் நிழற்படம் எடுப்பதற்கும், அன்றைய நாளில் செயற்குழுக் கூட்டம் நடத்துவதற்கும் 2225 மார்க்கம் வீதியில் அமைந்துள்ள தமது கணக்காய்வு நிறுவனப் பணியகத்தில் இடவசதியளித்து உதவிய மதிப்புக்குரிய கணக்காய்வாளர் திரு. வல். புருசோத்தமன் அவர்களுக்கும், மற்றும் நிழற் படங்களைச் சிறப்பாக எடுத்து வழங்கிய திரு. சயந்தன் பசுபதி அவர்களுக்கும், இவ்விதழுக்கு விளம்பரம் நல்கிய அன்புக்குரிய திரு. சுதேசன் பத்மநாதன் அவர்களுக்கும் கழகத்தின் சார்பில் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எமது இதழை விரும்பிப் படிப்பதுடன் தமது கருத்துக்களையும் விமர்சனங்களையும் முன் வைத்து எம்மை ஊக்கப்படுத்தும் வாசகர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றி உரித்தாகட்டும்!



அன்புடன்
**பாவலர் பவானி தர்மகுலசிங்கம்.**
செயலாளர்
கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்
ரொறொன்ரோ, கனடா.

**கவிதை**

ஓவியன் வண்ணங்களைக் கொண்டு செய்வதைக் கவிஞன் சொற்களைக் கொண்டு செய்யும் கலைதான் கவிதை.

மெக்காலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

தமிழ்மொழி தொன்மைமிகு வரலாறு கொண்டது. தொடக்க காலத்திலே தமிழ்மொழியில் பாடல்கள், கதைகள் என்பன வாய்மொழியாக வழங்கிவந்து, மொழியின் வளர்ச்சிநெறியிற் புலமைவாய்ந்த புலவர்களால் செவ்வியல் இலக்கியங்கள் படைக்கப்படலாயின. பாடல் மரபுகள் வளர்ச்சியடைந்த நிலையில் பாடல்களுக்குச் செம்மையான வடிவங்களும் கட்டுக்கோப்பும் அமையும் வகையில் யாப்பிலக்கண நூல்கள் தோன்றலாயின. அவற்றின் வழியே மரபுவழிக் கவிதைகள் என்ற மகுடத்துடன் செவ்வியல் இலக்கியம் தமிழிலே தோன்றித் தமிழ்மொழியை அணிசெய்வதாயிற்று.

மரபுக் கவிதைகளின் இலக்கண உறுப்புக்களாக யாப்பிலக்கண நூல்கள் கூறும் எழுத்து-அசை-சீர்-தளை-அடி-தொடை என்பவற்றை அளவுகோல்களாகக் கொண்டு புலவர்கள், கவிஞர்கள் மரபுக் கவிதைகளைப் படைக்கலாயினர். அவ்வாறு யாப்பு இலக்கணங்களுக்கு அமைவாகப் பாடப்படும் பாடல்கள் அகவல், வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா எனவும், அவை ஒவ்வொன்றின் உட்பிரிவுகளாகத் துறை - தாழிசை - விருத்தம் என்ற பாவடிவங்களும் தோன்றலாயின. ஐரோப்பியர் வருகைக்கு முன்பாக நாட்டுப்புற இலக்கிய வடிவங்களும் செவ்வழி இலக்கிய வடிவங்களுமே தமிழ்மொழியில் வழங்கிவந்துள்ளன.

ஆனால், ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் மரபுவழிக் கவிதையைத் தொடர்ந்து, புதுக்கவிதை மரபு அறிமுகமாகி இன்று இப்பாடல் வடிவம் மிகப் பெரும்பாலான படைப்பாளிகளின் கவிதைக் கருவியாகவே அமைந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூற்றாண்டின் தொழில் நுட்ப வளர்ச்சியும் ஏனைய வாய்ப்புக்களும் மலிந்து கிடக்கும் சூழல் புதுக்கவிதை வளர்ச்சிக்கு ஊக்க சக்தியாக அமைந்தது.

இலக்கியத்தில் மரபு பேணப்படுவது ஓரினத்தாரது மொழியின் இன்றியமையாத தேவையாகிறது. இத்தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், கனடாவில் மரபுக்கவிதையைப் பேணவும், மரபுவழிக் கவிஞர்களுக்கு உற்சாகம் அளிக்கவும், குறிப்பாக இளைய தலைமுறையினருக்குத் தமிழ் மொழியிலும், மரபுக்கவிதையிலும் நாட்டம் கொள்ளச்செய்யும் நோக்குடனும் 2011ஆம் ஆண்டு மாவிலி மைந்தன் அவர்களின் தலைமையிலே கனடாத் தமிழ் கவிஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்டு இற்றைவரை இக்கழகம் தமிழ்மொழிக்கும் தமிழிலக்கியத்திற்கும் ஆற்றிவரும் பணிகள் பாராட்டத்தக்கவையாகும்.

கவிஞர் கழகம், கவிதை வகுப்புக்களை 2011ஆம் ஆண்டிலிருந்தே நடத்திவருகின்றது. கொரோனா பெருந்தொற்றுக் காலத்திலிருந்து யாப்பு வகுப்புக்கள் இணையவழியாகத் தொடர்ச்சியாக நடத்தப்படுகிறது. இவ்வாய்ப்பினால் கனடா, தமிழகம், இலங்கை, அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து இப்போது 25 மாணவர்கள் கவிதை வகுப்பில் இணைந்துள்ளனர் என்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

தொடக்கத்தில் யாப்பு வகுப்புக்களைக் கவிஞர் கந்தவனமும், பண்டிதர் ம. செ. அலெக்ஸ்சாந்தரும் நடத்தினர். அவர்களுக்குப் பின்னர் தொடர்ச்சியாக மாவிலி மைந்தன் சண்முகராசா அவர்கள் நல்லாசானாக அமர்ந்து கவிதை வகுப்புக்களை நடத்திவருகின்றார் என்பதையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

அக்கழகத்தினரின் செயற்பாடுகளும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. ஆண்டு தோறும் கவிதைக்கு விழா எடுத்து அவ்விழாவிற் "கவிச்சரம்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைத் தொகுப்பை வெளியிட்டு வருகின்றனர். தமிழர் அனைவரும் பெருமிதத்துடன் நினைவுகொள்ளும் "மரபுரிமைத் திங்கள்" விழாவை ஆண்டுதோறும் நடத்திவருகின்றனர். இவ்வாண்டு நடைபெறும் இவ்விழாவில் இச் சிறப்புக் கவிதைத் தொகுதி வெளியிடப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கவிஞர் கழகத்தினர் கவிஞர்களுக்கு விருது வழங்கும் செயற்றிட்டமும் கொண்டியங்குகின்றனர். இதுவரை கவிஞர் வி. கந்தவனம் அவர்களுக்கு "இலக்கிய வித்தகர்" எனவும், பண்டிதர் ம. செ. அலெக்சாந்தர் அவர்களுக்கு, 'செந்தமிழ்ச் சிற்பி' எனவும், வே.இராஜலிங்கம் அவர்களுக்கு "விருத்தக்கவி வித்தகர்" எனவும் சபா.அருள்சுப்பிரமணியம் அவர்களுக்கு 'குழந்தைக்கவி வித்தகர்' ஆகிய விருதுகளை வழங்கியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சான்றோரை வாழும்போது வாழ்த்தும் மரபுக்கு அமைவாக மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை, சோக்கல்லோ சண்முகம், மார்க்கம் சந்திரன், சுகந்தி மார்க்கண்டு, அம்பிகா வாசுதேவன் ஆகிய ஐந்து கவிஞர்களுக்குப் "பாவலர்" விருது விழங்கி மதிப்பளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கவிஞர் கழகத்திற்குத் தலைமை தாங்கி அதனை வழிநடத்திக் கொண்டிருக்கும் 'பாலவர்' குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்களும் அவரது செயற் குழுவினரும், கவிதை வகுப்பிற்குப் புதிய மாணவர்களை இணைத்து, அவர்களைக் கவிஞர்களாக உருவாக்கிவரும் செயற்பாடுகளும், கவிதை வகுப்புகளிற் படித்தவர்களையும், படிக்கின்றவர்களையும் ஊக்கமளிக்கும் வகையில் அவர்களது சிறந்த படைப்புக்களைத் தேர்ந்தெடுத்துச் சிறப்புமலரில் வெளியிட்டு அவர்களுக்கு மேலும் ஊக்கமூட்டும் செயற்பாடும் பாராட்டத்தக்கது.

இவ்வகையிற் சிறந்த பல்வகை நோக்கங்களுடன் இயங்கும் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தினைப் பாராட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நடத்தும் இவ்விழாவில் வெளியிடப்படும் கவிச்சரம் - 5 சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிக்க பேருவகை அடைகின்றேன்.



**செந்தமிழ்ப் பேரொளி பேராசிரியர் முனைவர்**
**பாலசுந்தரம் இளையதம்பி**
தலைவர், தமிழ் மொழியியல் துறை,
தென்னாசிய நுண்கலைக் கற்கைமையம் - அண்ணாமலை கனடா
ரொறொன்ரோ, கனடா. 01.01.2025

தமிழ் மரபுத் திங்கள் - கவிச்சரம் இதழ் 5 வெளியீட்டு விழாவில், கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தால் நடத்தப்பெறும் கவிதைப்பயிலரங்க வகுப்புகளில் கடந்த 8 ஆண்டுகளுக்கு மேலாகத் தவறாது வருகைதந்தும், கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றியும், வில்லிசை, நாடகம் போன்ற கலைகளில் சிறந்தும் விளங்கும் 'சோக்கெல்லோ சண்' என அழைக்கப்படும் பாவலர் திரு. தாமோதரம்பிள்ளை சண்முகநாதன் அவர்கள், '**கலைக் கவி**' விருது வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கனடாவில் வாழும் தமிழர்கள் மத்தியில், பல்துறை அறிஞர்கள் பலர் சமூகப்பணியாற்றி வருகின்றனர். இவர்களில் தமிழ் அறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், கவிஞர்கள் எனப் பலர் உள்ளனர். இயல்பாகவே கவிதை எழுதும் ஆற்றல் படைத்த கவிஞர்கள் மரபுக்கவிதை, புதுக்கவிதை எழுதிவருகின்றனர். யாப்பிலக்கணம் தெரியாமல் மரபுக்கவிதை எழுதுவது முடியாத காரியமாகும். இந்த வேளையில், மரபுக்கவிதை எழுதுவதற்கு ஆர்வமுடைய பலருக்கு யாப்பிலக்கணம் கற்பிப்பதற்கு கவிநாயகர் வி.கந்தவனம் அவர்களும் பண்டிதர் மா.செ.அலெக்ஸ்சாந்தர் ஆகிய இருவரும் முன்வந்தனர்.

2007 ஆம் ஆண்டு கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் யாப்பிலக்கண வகுப்பைத் தொடங்கியது. ஆசிரியர்களாக மேற்கூறிய இரண்டு ஆசான்களும் பொறுப்பேற்றுத் தன்னார்வலர்களாக யாப்பிலக்கணம், பழந்தமிழ் இலக்கியம் முதலியனவற்றைக் கற்பிக்கத் தொடங்கினர். யாப்பிலக்கணத்தை முறையாகக் கற்ற எண்மர் மரபுக் கவிஞர்களாகச் சான்றுதல் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். அந்த எட்டுக் கவிஞர்களைக் கொண்டு 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதே கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் ஆகும். இதனை முன் நின்று தொடக்கிய பெருமை கவிநாயகர் வி.கந்தவனம், பண்டிதர் மா. செ. அலெக்ஸ்சாந்தர் ஆகிய இருவரையுமே சாரும்.

கழகத்தின் ஆரம்பகாலத் தலைவரான பாவலர் மாவிலி மைந்தன் சி.சண்முகராசா அவர்கள், இரண்டு ஆசிரியர்களும் விட்டுச்சென்ற பணியை 2017 ஆம் ஆண்டு முதல் செய்துவருகின்றார். இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்கள் யாப்பிலக்கணம் கற்றுக் கவிதையெழுதப் பயிற்சி பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு இடம்பெற்ற கவிச்சரம் - 4 வெளியீட்டு விழாவில் ஐந்து மரபுக் கவிஞர்கள் பாவலர் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. கழகத்தின் தற்போதையத் தலைவர் குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில், கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் தனது கவிச்சரம் -5 ஆவது இதழை வெளியிடுகிறது. அதன் இதழாசிரியராகப் பாவலர் சி.சண்முகராசா அவர்கள் பணியாற்றுகின்றார். இவ்விதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கவிஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல், அதன் நிகழ்ச்சிகளில் நேரடியாகவும் மெய்நிகர் மூலமும் பங்கு பற்றிக் கருத்துக் கூறிவந்துள்ளேன். தொகுத்துக் கூறுவதாயின் இம்மண்ணில் மரபுக் கவிஞர் பரம்பரையை உருவாக்குவதில் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் பெரும்பங்காற்றி வருவது மிகப்பெரிய சாதனையாகும். இந்தச் சிறந்த பணி தொடரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். இறுதியாக கவிச்சரம் ஐந்து இதழ் சிறப்பாக அமைய எனது வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி!



**சிந்தனைப் பூக்கள் எஸ். பத்மநாதன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் கவிச்சரம் 5 இதழ், இதழாசிரியர் மாவிலி மைந்தன் சி. சண்முகராசாவின் ஆசிரியர் தலைப்புக் கட்டுரை, கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் தலைவர் பாவலர் க. குமரகுரு அவர்களின் தலைவர் சிந்தனைகள், கழகச் செயலாளர் பாவலர் பவானி தர்மகுலசிங்கம் அவர்களின் செயலாளர் அறிக்கை, வாழ்த்துச் செய்திகள், நினைவேந்தற் செய்திகள் என்பவற்றோடும் 27 கவிஞர்களினது கவிதைகளோடும், ஒரு கட்டுரை, ஒரு சிறுகதை என்பனவற்றைத் தாங்கியவாறு கனதியாக வெளிவருகிறது. கவிச்சரம் 5 இதழ் பற்றி அணிந்துரை வழங்குமாறு என்னிடம் கேட்கப்பட்டபோது அதனை நான் மிக்க மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டேன்.

இற்றைக்கு ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழில் வசனநடை தோன்றியது. அதற்கு முன்பே பல்லாயிரம் ஆண்டுகளாகச் செய்யுள் வடிவிலேயே இலக்கியங்களும், இலக்கண நூல்கள் முதலானவையும் இயற்றப்பட்டுவந்துள்ளன. அந்த நீண்டகாலப் பகுதியில் இன்றுள்ளதைப்போல அச்சுப்பதிக்கும் வசதிகள், இணையம் போன்ற இலத்திரனியல் வசதிகள் என்பன அடியோடு இல்லாதிருந்தன. அதனால் அக்காலத்தில் புலவர்கள் தமது நூல்களைத் தமது மாணாக்கர்களுக்கு வாய்மொழியாகக் கற்பித்து மனப்பாடம் செய்யவைத்தார்கள்.

அம்மாணவர்களும் அவ்வாறே தம்மாணாக்கருக்கு மனனக் கல்வியூட்டிவரப் பின்னைய தலைமுறைகளுக்கும் அந்நூல்கள் தொடர்ந்ததன் மூலம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அவை பேணப்பட்டு வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மனன உத்தியை இலகுவாக்கவே இராகச்சுவை தரும் இசைகொண்ட ஓசை யொழுங்கும், எதுகை, மோனைகளும் கொண்டவையாகச் செய்யுள்கள் பாடப்பட்டு வந்தன. அப்படியாக அந்த நீண்ட காலவெளியில் புலவர்களாற் கையாளப்பட்ட பலநூறு மெட்டுகளிலிருந்து பொறுக்கியெடுத்து அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா யாப்புகளும் அவற்றின் இனங்களும் தொல்காப்பியர் போன்றவர்களால் யாப்பு இலக்கணமாக வகுக்கப்பட்டன.

வசனநடை வழக்குக்கு வந்தபின்னர் செய்யுள் நடையில் எழுதப்பட்டுவந்த மொழியிலக்கண நூற்பாக்களின், மருத்துவ வாகடங்களின், தத்துவ, சமய நூல்களின் கருத்துகள் யாவும் 18ஆம் நூற்றாண்டிலிருந்து வசனநடையில் வடிக்கப்படலாயின.

செய்யுள்நடை கால, தேசக் கண்ணாடிகளாகச் சமூகஞ்சார் கருத்துகளைப் பதிவு செய்யும் இலக்கிய வடிவத்தை மட்டுந்தழுவித் தனித்துறையாக வளர்ந்து வருகிறது. இக்காலத்தில் பழைய செய்யுள் யாப்பு வடிவங்களோடு சிந்து, கண்ணி ஆகிய வடிவங்களும், புதுக்கவிதை வடிவங்களும் கையாளப்பட்டு வருகின்றன.

இலகுவாக அனைத்து நூல்களும் அச்சேற்றப்படவும், இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படவும் இன்று வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. பழைய ஏட்டுச்சுவடிகளில் கிடந்து அழிந்துகொண்டிருந்த பழந்தமிழ் நூல்களை அழியவிடாமல் அச்சிட்டுப் பாதுகாத்த பெரியார்களாக டாக்டர் உ.வே. சாமிநாதையர், சி. வை. தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர் முதலியோர் இன்று தமிழறிஞருலகால் தலைமேல் வைத்துப் போற்றப்படுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா மற்றும் அவற்றின் விகற்பங்கள் போன்றவை ஒவ்வொன்றும் வேறு வேறு மெட்டுகளைக்கொண்டவை. அந்தமெட்டுகளைத் தனித்தனியே மனதில் பதித்துக்கொண்டு பின்பு தாம்பாடும் பாடுபொருட்கருத்தை உச்சமாக வெளிப்படுத்தி உதவக்கூடிய மெட்டைத் தெரிந்தெடுத்து வெற்றிகரமாகப் பாடி முடிப்பதற்காகவே அந்தப் பா, பாவிகற்பங்களைப் பாரதி போன்ற பெருங்கவிஞர்கள் கற்றனர்.

செய்யுள் யாப்பு பட்டியலிடும் பாக்கள், பாவினங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலத்தில் பெருவழக்குப் பெற்றிருந்தன. சங்க காலத்தில் ஆசிரியப்பா எனப்படும் அகவலும், சங்கமருவிய காலத்தில் வெண்பாவும், பல்லவர் காலத்தில் விருத்தப்பாவும், சோழர்காலத்தில் விருத்தப்பா வகைகளும் வெண்பாவும், நாயக்கர் காலத்தில் இவற்றோடு சிந்து, கண்ணி வகைகளும் புலவர்களால் பெருவழக்காகக் கையாளப்பட்டு வந்துள்ளன.

ஐரோப்பியர் காலந்தொடங்கி இன்றுவரை மேற்கூறிய வடிவங்களோடு மேலை நாட்டிலிருந்து வந்து தமிழ் இலக்கிய மரபுக்குள் புகுந்த Free Verse எனப்படும் கட்டில்லாக் கவிதை, யப்பானிலிருந்து வந்து புகுந்த ஹைக்கூ கவிதை போன்ற வடிவங்களும் கையாளப்படுகின்றன.

தமிழ்நாடு, தமிழீழம், மற்றும் தமிழர் குடியேறி வாழும் 50க்கும் மேற்பட்ட நாடுகளில் அண்மைக்காலமாகச் செய்யுள் யாப்பை அறவே கைவிட்ட புதுக்கவிதையையே எழுதத்தொடங்கியுள்ள ஏராளமானோர்களில் மெல்ல மெல்ல வளர்ச்சிபெற்று யாப்புக்கவிதை பாடும் வல்லமை பெற்றவர்கள் பலரும் உள்ளனர். ஆனால் கனடாவிலோ இந்த வழமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைமையான மரபு வழக்கமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதாவது முதலில் யாப்பை முறையாகக் கற்று, அந்த யாப்பறிவைக்கொண்டு, யாப்பு வடிவங்களுக்கு முதன்மை கொடுத்துப் பாடியவர்கள் இன்று பொருட்செறிவும், உணர்ச்சி வீச்சுங் கொண்ட மரபுக்கவிதைகளைப் பாடத்தொடங்கிவிட்டமை கனடாத் தமிழிலக்கிய உலகம் இறும்பூது கொள்ளவைக்கும் சிறப்பாகும். இந்த உண்மைக்கு இவ்விதழிலுள்ள கவிதைத் தொகுதிகள் சான்றுபகர்கின்றன.

உன்னதமான இந்த நிலைமைக்குக் கனடாவில் வித்திட்டவர்கள் இங்கு 20 ஆண்டுகளுக்கு மேலாக இலவச யாப்பிலக்கண வகுப்புகளை நடத்திப் பலரை மரபுக் கவிஞர்களாக உருவாக்கிய அமரர்கள் கவிஞர் கந்தவனம், பண்டிதர் அலெக்ஸ்சாந்தர், பண்டிதர் குமரேசு ஆகிய மேன்மக்களே. இன்று இப்பணியைத் தனியொருவராகத் தொடர்ந்தாற்றுகின்றார் கவிஞர் மாவிலி மைந்தன் சி. சண்முகராசா 'பாவிலியாம் பலரையின்று பாவலர்க ளாக்குகின்ற மாவிலிசண் முகராசா வாழ்த்துக் குரியவரே!'

பழந்தமிழ்ச் செய்யுளிலக்கியங்களுள் பலவும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பேணிக்காக்கப்பட்டு வந்தமை தாம்பொதிந்து வைத்திருந்த செழுமையான கருத்துக் கருவூலங்களால் தானல்லாமல் அவற்றின் யாப்புச் சிறப்பு நோக்கியன்று என்பது உண்மை. அதேவேளை யாப்பு ஓசையின்பம், எதுகை, மோனைச் சொல்லின்பம் இடம்பெறாத புதுக்கவிதைகள் என்னதான் கருத்துச் சிறப்புக் கொண்டிருந்தாலும் வாசகனுக்கு அவை மனப்பாடமாகவோ, அதனை அவன் ஞாபகத்தில் வைத்திருந்து பிறருக்கோ, மேடையிலோ, தனது எழுத்துகளிலோ அவற்றை மேற்கோள் காட்டி விளக்கவோ வாய்ப்பு இருக்காது. ஏன்? அவனே அப்படைப்புகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாக மீட்டுச் சிந்தித்துப் பயன்பெற முடிவதில்லை. எனவே நல்ல கருத்துள்ள ஒரு கவிதை அது எழுந்த காலத்திலும் தொடர்ந்து எல்லாக்காலங்களிலும் முழுமையான பயன்தர, மரபுக்கவிதையின் உயிர்நாடியான ஒழுங்குபட்ட ஓசையும், மனப்பதிவுக்குத் தூண்டுதலான எதுகை மோனைக் கொழுக்கிகளும் அப்பாடலில் இடம்பெற்றேயாக வேண்டும்.

இத்தொகுதி முழுக்க முழுக்க ஓசை ஒழுங்குள்ள யாப்பு மரபுக்கவிதைகளின் திரட்டு ஆகையால் இவை சொல்லின்பம் பயக்கும் தன்மை பெற்று, கம்பன் சொன்னதுபோல் 'செவிநுகர் கனி' களாக விளங்குவதை வாய்விட்டுப்படித்து உணரலாம். இத்தொகுதிக் கவிதைகள் 27இல், 14 பெண்பாற் கவிஞர்களால் பாடப்பெற்றவை என்பது இன்னொரு சிறப்பும் பெருமைக்குமுரிய செய்தியாகும். அதாவது இக்கவிஞர்களில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் பெண்கள். இது வெளிப்படுத்தும் இன்னொரு மறைமுகச் செய்தி கனடாத் தமிழ்ச் சமூகத்தில் பெண்விடுதலை எட்டப்பட்டுள்ளது என்பதாகும்.

இந்தப் பதின்நால்வரோடு சேர்த்து 2 மரபுக்கவிதை நூல்களை எழுதி வெளியிட்ட மூத்தபெண் பாவலர் மனோன்மணி வரதராசாவையும் சேர்த்துப்பார்த்தால் 15 பேர் உள்ளனர். எந்த நாட்டுத் தமிழ்ச்சமூகத்திலும், எந்தக்காலப்பகுதியிலும், இப்படிக் கவிஞர்களில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமானோராகப் பெண் கவிஞர்கள் இருந்தார்களென்று நானறியவில்லை.

ஒருநேரம் எந்தப்பாடுபொருட் கருத்தில் பாவலனின் மனம் மையங்கொண்டு சுழன்றுகொண்டிருக்கிறதோ அந்தக் கருத்தையே அவனால் சந்தமாக, உணர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்த்துவங்கொண்ட கவிதையாக வெற்றிகரமாக அப்போது படைக்கமுடியும்.

இந்த இதழிலுள்ள வரிசைப்படி இதழை அணிசெய்யும் படைப்பாளிகளின் படைப்புகள் பற்றிய எனது சுருக்கமான கருத்துகளைப் இங்கே பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**பாவலர் அகணி சுரேஸ்** - இசைப்பாடல்களும் கவியரங்கக் கவிதைகளும் கேட்டதும் பொருள் புலப்படும் எளிமை பெற்று விளங்க வேண்டும். இசைப்பாடல்களை இந்த ஞாபகத்தோடு பாடிவரும் அனுபவசாலியான அகணி சுரேஸின் கவிதை இங்கும் அத்தன்மையுடன் மிளிர்கிறது.

**பாவலர் அம்பிகா வாசுதேவன்** - வானொலிக் கவியரங்குகளில் நிறையப் பாடிவரும் அம்பிகா வாசுதேவனின் யாப்புக் கட்டமைப்புக்கொண்ட கவிதையில் இனப்பற்று, சைவப்பற்று ஆகியன வெளிப்படுகின்றன.

**பாவலர் வே. இராசலிங்கம்** - பல கவிதை நூல்களை எழுதிய கவிஞர், ஊடகவியலாளர் வே. இராசலிங்கம் தமிழுலகு நன்கறிந்த புகழாளர். இவர் ஆங்காங்கு கையாளும் கடின சொற்களைத் தவிர்த்தால் புகழின் உச்சத்தை நிச்சயம் தொடுவார்.

**பாவலர் இராஜ்மீரா** - கனடா நன்கறிந்த கவிஞர் இராஜ்மீரா. தமிழோடு தமிழாய் வாழ்பவர். மரபுத் தூய்மைகொண்ட கவிதை நூல் வெளியிட்டவர். குருபத்தி செலுத்தும் செவ்விய வெண்பாக்களைப் படைத்துள்ளார்.

**கவிஞர் இறாஜினி சுபாகரன்** - அகவற் சீர்களுள் கூவிளம், கருவிளம் வாய்பாட்டுச் சொற்களை மட்டுமே பயன்படுத்திக் கருத்தும் சோடை போகாவண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையை அற்புதமாகப் பாடியுள்ளமை புதுமை, பாராட்டுக்குரியது.

**பாவலர் கனி விமலநாதன்** - சிறுவர் வசன இலக்கியத்தில் விஞ்ஞானத்தைப் புகுத்துவதில் வெற்றிகண்டு பிரபலம் அடைந்தவர் கனி விமலநாதன். இங்கும் வானியல் சோதிடம் பற்றிய விஞ்ஞான உண்மைகளைக் கடின வெண்பா யாப்பில் அவசர கதியில் பாடியுள்ளார். நெகிழ்வான அகவற்பா யாப்பில் நறுக்குத்தெறித்தாற்போல் இலக்கணச் சூத்திரங்கள் போல யாவருக்கும் விளங்கும் விதத்தில் வானியல் உண்மைகளைப் பாடியிருந்தால் வெற்றி முழுமை பெற்றிருக்கும்.

**கவிஞர் குமரகுரு கணபதிப்பிள்ளை** - தாய்மண் பட்ட அவலங்களுடன் காலக்கண்ணாடியாக அமைந்த 'கண்ணீரில் தோய்ந்த கதை!' வெண்பாக்கள் நெஞ்சைத் தொடுகின்றன.

**கவிஞர் சி. கி. ஆனந்தன்** - ஆறுசீர் விருத்தங்களை நிறைசேர் செம்பாக்களாக அறங்கூறும் அமுத வரிகளாகப் பாடியுள்ள சி.கி.ஆனந்தன் காசி ஆனந்தனை நினைவூட்டுகிறார்.

**பாவலர் மாவிலி மைந்தன் சண்முகராசா** - ஒரு மாணவன் தான் கற்ற ஒரு பாடத்தைப் பிறருக்குக் கற்பிக்கும்போது அப்பாடத்தை முழுமையாக விளங்கிக்கொள்கிறான் என்கிறது நன்னூல். மாணவர்களுக்கு கவிதை யாப்பைக் கற்பிப்பதன் மூலம் முழுமையான கவிஞராக நிறைந்துள்ளார் மாவிலி மைந்தன் என்பதற்கு அவரது எண்சீர் விருத்தங்கள் சான்றாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாவலர் சோக்கெல்லோ சண்முகநாதன்** - பாவலர் சண்முகநாதனின் வில்லுப்பாட்டு, நாடகங்கள், நகைச்சுவைகள், நடிப்புகள் போன்று அவரது இந்தத் தமிழ்வளர்ச்சித் தொல்சிறப்புக் கூறும் இனிய கவிதையும் சோக்கெல்லோ? அதாவது சோக்கன்றோ!

**பாவலர் மார்க்கம் சந்திரன்** - வானொலிகளிலும், மேடைகளிலும், பத்திரிகைகளிலும், நூல்களிலும் மெருகேறிப் புகழ்பெற்ற கவிஞர் மார்க்கம் சந்திரனின் பொருட்செறிவு மிக்க கவிதையிது.

**கவிஞர் மானியூரான் சயந்தன் பசுபதி** - 15 ஆண்டுகளாக ஈழத் தமிழ் நெஞ்சங்கள் சுமக்கும் பெரு நெருப்பை உணர்ச்சிகரமாக வீச்சான மெட்டிலே பாடியுள்ள மானியூரான் அசல் கவிஞனாக மேலும் ஓங்குவார்.

**பாவலர் சுகந்தி மார்க்கண்டு** - உயிரோட்டமான வெண்பாக்களை அநாயசமாகப் பாடிவரும் கவிஞர் சுகந்தி மார்க்கண்டு, இந்த 'நான் மகிழ்ந்த கிராமியம்' கவிதையையும் பழகு தமிழில் அழகுறப் பாடியுள்ளார்.

கவிஞர் **செல்வி மயில்வாகனம்** - பாட்டின் ஓசைச் செப்பம் சிறந்து விளங்கும் கவிஞர் **செல்வி**யின் அறுசீர் விருத்தங்கள் எதுகைகளும் சரியாகக் கவனிக்கப்பட்டிருந்தால் மேலும் கவர்ச்சி பெற்றிருக்கும்.

**கவிஞர் தில்லைராணி பாலேஸ்வரன்** - கவிஞர் தில்லைராணி எல்லையற்ற மனம் என்னும் பாடுபொருளைத் தெரிந்தெடுத்து அகவல் யாப்பைப் பேணிப் பாடியுள்ள போக்கு அவரை நிச்சயம் மேலும் வளர்க்கும்.

**கவிஞர் தேவகி விக்னேஸ்வரன்** - கவிஞர் தேவகியின் கவிதையில் மழைநாளில் நிகழ்வன படிமக் காட்சிகளாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்ரூபமாகக் காட்டப்பட்டுள்ளமை அவரின் கவித்துவத் தேர்ச்சியைப் பறைசாற்றுகிறது.

**கவிஞர் நாகேஸ்வரி சிவகுருநாதன்** - இவரது பாடுபொருள் முன்னம் பலராலும் பாடப்பட்டதாயினும் அகவல் வடிவச்சாயல் சிறப்புற அமைந்துள்ளது. மோனைத்தொடர்பு அடிதோறும் பேணப்படுமேல் கவிதை மேலும் இனிமை பெறும்.

**பாவலர் கந்த ஸ்ரீபஞ்சநாதன்** - பாவலர் பஞ்சநாதனின் கவிதைகள் தமிழ் வேதம் எனப்படும் 12 திருமுறைகளின் பெருமை சாற்றும் வீச்சான கவிதைகள்.

**பாவலர் பவானி தர்மகுலசிங்கம்** - பவித்திரா என நன்கு அறியப்பட்ட பாவலர் பவானி தர்மகுலசிங்கம் கனடாவின் மூத்த மரபுக்கவிஞர். இனமாள் கவிஞர். இக்கவிதையும் 'அந்தமாதிரி' த்தான்.

**கவிஞர் புவனா கருணாகரன்** - கவிஞர் புவனாவின் கவிதை, வாசகனைக் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டோடும் ஓட்டமும் அதற்குக் காரணமான பழகுதமிழ்ச் சொல்லாட்சியும் பெற்று நல்லெதிர் காலத்துக்குக் கட்டியங் கூறுகிறது.

**பாவலர்மணி முனைவர் புட்பா கிருட்டி** - கருத்துச் செறிவுடைய கலிப்பா மெட்டும் கலந்த அகவற்பா பழகுதமிழில் இனிக்கிறது.

**பாவலர் மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை** - பாவலர் மதிபாஸ்கரன் தெரிந்தெடுத்த சிந்து வடிவமும் தாய்மண்ணின் சிறப்புகளான உள்ளடக்கமும் கவிதைக்குக் கவர்ச்சியைத் தருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புலவர் முருகேசு மயில்வாகனன்** - சாமானியர்களுக்கு விளங்காத யோகாசனம் பற்றிப் பாவின யாப்பில் பாடத்துணிந்து வெற்றியும் கண்டுள்ள, கனடாவில் களங்கண்ட மயில்வாகனப் புலவர் பெருமானுக்குப் பாராட்டுகள்.

**கவிஞர் மைதிலி தயாபரன்** - கவிஞர் மைதிலி, பசுமை வளத்தின் சிறப்பை உள்ளடக்கமாகக் கொண்டு கொச்சகக் கலிப்பா யாப்பில் பாடி ஓரளவு வெற்றி கண்டுள்ளார். மேலும் கவிதைகளைப் பாடிப் பாடிப் பெறும் தேர்ச்சி இவரது கவித்துவத்தை நிச்சயம் முழுமையாக்கும்,

**கவிஞர் வாணிதாசன்** - தமிழ்நாட்டில் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த புகழ் பூத்த கவிஞர் வாணிதாசன் பெயரால் எழுந்துள்ள இக்கவிஞரின் இதுபோன்ற உணர்ச்சி பொங்கும் கவிதைகள் மூலம் அந்தக் கவிஞரின் நிலையை இவரும் எட்டமுடியும்.

**கவிஞர் விமலாதேவி புஸ்பநாதன்** - தனிமைதருந் துயரங்களைத் துயர்ததும்பப் பாடிவந்து முடிவில் தனிமை தரும் தவ இனிமையும் கூறிக் கவிதைக்கு முடி சூட்டியுள்ளார்.

**கவிஞர் ஹேமா சுஜானந்** - மரபுக் கவிதையின் உயிர்நாடியான ஒழுங்குபட்ட ஓசைச் செப்பமும் புதிய பாடுபொருட் சிறப்பும் கொண்ட கவிஞர் ஹேமாவின் கவிதை இங்கு இடம்பெற்றுள்ளமை பாராட்டுக்குரியது.

**கவிஞர் இரா. சம்பந்தன்** - கலிப்பா கட்டுரை வேடந் தாங்கிச் சலிப்பாய்த் தோன்றினும் ஆங்காங்கு துள்ளுவது அழகாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எழுத்தாளர் க. விக்னேஸ்வரன்** - வளர்ந்துவரும் எழுத்தாளர் விக்னேஸ்வரன் அவர்கள் தனது சிறுகதையில் பொதுவான சமூகச் சிக்கலை மையப் பொருளாகக் கொண்டிருந்தாலும் சிறுகதைக்கான கட்டமைப்பை மிகச் சரியாகவே கையாண்டிருப்பது பாராட்டுக்குரியது.

இக்கவிச்சரத்தில் இடம்பெறும் 27 கவிதைகளில் 5 கவிதைகள் அதாவது ஏறக்குறையக் காற்பங்கு தமிழைப்பற்றி மட்டும் அமைந்துள்ளமை அக்கவிஞர்களின் தமிழ்க் காதலின் ஆழத்தை, தமிழ்மயமாந் தன்மையைக் காட்டுகிறது. இவர்களது இத்தமிழுணர்ச்சி மேலும் விரிவடையும்போது, தமிழர் சமூக மேம்பாட்டை, தமிழர் ஆளும் வலுவை, தமிழர் ஆன்மீகத்தை, பொருளாதாரத்தை மேம்படுத்தும் வேட்கை உந்தற் கவிதைகளையும் நிச்சயம் பாடுவார்கள்.

**'ஆடுதல் பாடுதல் சித்திரம் - கவி**

**ஆதியனைய கலைகளில்**

**ஈடுபட் டொன்றி உழைப்பவர் - பிறர்**

**ஈனநிலைகண்டு துள்ளுவர்'**

என்று மகாகவி பாரதியார் கண்ட யதார்த்தமும் இதுதான். கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் தொடர்ந்தும் இதுபோன்ற பணிகளில் ஈடுபடுவதன் மூலம்,

**'நமக்குத் தொழில்கவிதை! நாட்டுக்குழைத்தல்**

**இமைப்பொழுதும் சோராதிருத்தல்'** என்ற ஓர்மத்துடன் செயற்பட எனது மனமார்ந்த வாழ்த்துகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்

அமைப்பாளர், இணுவில் கலை இலக்கியக் கழகம், கனடா

**கவிதை**


மனிதனுடைய பேச்சு, மனிதனுடைய உணர்ச்சி ஆகிய இவற்றின் தனிப்பட்ட வடிவமே கவிதை என்பது. மேனி அலுங்காமல் அந்தத் தனிப்பட்ட வடிவத்தை ஆக்கவும் முடியாது. நுகரவும் முடியாது.

கரோட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களுக்கு இதய அஞ்சலி



இலக்கிய வித்தகர் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்கள் 2024-03-11ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். செந்தமிழையும் சிவநெறியையும் உலகறியச் செய்த பெருமகன். கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர், நடிகர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். வானொலி, பத்திரிகை, கவியரங்கம், பட்டிமன்றம் மூலம் அனைவராலும் நன்கு அறியப்பட்டவர். அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அமரர் கவிநாயகர் கந்தவனம் அவர்கள் சிறந்த கல்வியியலாளர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் B.A பட்டம் பெற்றவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு வளாகத்தில் நாடகத் துறையில் டிப்ளோமா பட்டமும், 1980 ஆம் ஆண்டு ஆப்பிரிக்காவிலுள்ள இலெசூத்து நாட்டில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றும்போது உயர்தர ஆங்கில டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிநாயகர் இலங்கையிலும் ஆபிரிக்காவிலும் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி, 1988 நவம்பர் 11ஆம் தேதி கனடாவில் குடியேறியவர். குடும்பத்தைப் பராமரித்துக் கொண்டு கனடாவில் தமிழ் மொழி - இலக்கியம், தமிழர் பண்பாடு, இந்து சமயம் முதலியனவற்றின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்தார். அனைவரும் மதிக்கும் தமிழ் அறிஞராக விளங்கினார்.

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம், ஆத்ம ஜோதி தியான நிலையம் ஆகியவற்றை உருவாக்கி அவற்றின் தலைவராகவும், ஒன்ராரியோ இந்து சமயப் பேரவை, கனடா சைவ சித்தாந்த மன்றம் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் முதலியவற்றை அமைத்து அவற்றின் காப்பாளராகவும் செயற்பட்டார். கனடாவில் பண்டிதர் மா. செ. அலெக்ஸ்சாந்தர் அவர்களுடன் இணைந்து மரபுக் கவிஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

ஈழத்தில் கவிஞர் கந்தவனம் அவர்கள் புகழ்பெற்ற கவிஞராகத் திகழ்ந்தவர் "**கவியரங்கிற்கோர் கந்தவனம்**" என அனைவராலும் அழைக்கப்பட்டவர். கவிதை அவரது இயற்கைச் சொத்து. மரபோ, புதிதோ எதுவானாலும் படைப்பதில் விற்பன்னர். அவர் கவிதைகளில் சந்தமும், எதுகையும், மோனையும் இயல்பாக அமைந்திருக்கும்.

வெண்பா பாடுவதில் வல்லவர். வெண்பாக்களை மிக எளிதாகப் படைக்கும் ஆற்றல் மிக்கவர். இதற்கு அவர் எழுதிய பல வெண்பா நூல்கள் சான்றாக உள்ளன. எடுத்துக்காட்டாகச் சேக்கிழார் வெண்பா, நித்தியானந்த வெண்பா, விபுலாநந்த வெண்பா, விநாயகர் வெண்பா, செபரத்தின வெண்பா முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

கனடாவில் 90 நூல்களை வெளியிட்ட பெருமைக்குரியவர். ஐயாவின் சைவத்தொண்டிற்குச் சான்றாக அமைவது அவரது "பாவாரம்" நூலாகும். தமிழகத்திலும் ஈழத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள 108 (63 + 45) சிவாலயங்களின் தலவரலாறு, மூலமூர்த்தியின் பெருமை யாவற்றையும் வெண்பா, விருத்தப்பா ஆகிய வடிவங்களில் பாடியுள்ளார்.

அமரர் கவிநாயகர் வி. கந்தவனம் ஐயா கனடாவில் 36 ஆண்டுகள் வாழ்ந்து தமிழ் மொழி - இலக்கியம், தமிழர் பண்பாடு, சைவ சமயம் முதலியவற்றின் வளர்ச்சிக்காக உழைத்த தமிழ் அறிஞர். கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தை அமைத்து, அதன் காப்பாளராகவும், ஆசிரியராகவும் பணியாற்றிப் பல மரபுக்கவிஞர்களை உருவாக்கிய ஐயா அவர்களுக்கு எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம்.




**குமரகுரு கணபதிப்பிள்ளை (எம்.ஏ தமிழ்)**
**தலைவர்**
**கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பாவலர்
# அருட்கவி ஞானகணேசன் தம்பிஐயா
# நினைவலைகள்



கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் முன்னாள் தலைவர் அமரர் பாவலர் அருட்கவி ஞானகணேசன் தம்பிஐயா அவர்கள் பற்றிய நினைவலைகளை மீண்டும் இரைமீட்பதாக இந்தப் பதிவு அமையும் என நம்புகிறேன். டிசம்பர் 27, 2023 காலை சிவபதம் அடைந்த செய்தியானது எமது கழகத்திற்கும், மரபுக்கவிஞர்களாகவும் நண்பர்களாகவும் வலம் வந்த எங்கள் எல்லோருக்கும் அதிர்ச்சியையும், ஆழ்ந்த துயரத்தையும் ஏற்படுத்தியது. 2023 அக்டோபர் இறுதிப்பகுதியில் இருந்து ஏற்பட்ட சுகயீனத்தினால் நோயிலிருந்து மீள முடியாமல் போராடிக்கொண்டிருந்த அவர் இவ்வுலகை விட்டு நீங்கி இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய காலத்தில் தாயகத்தில் ஏற்பட்ட நிலைமையின் காரணமாக கனடாவில் புலம்பெயர்ந்து கனடாவில் குடிசார் பொறியியல் துறையில் புலமை பெற்று திட்ட ஒருங்கமைப்பாளராகக் குடிசார் பொறியியல் ஆலோசனை நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்தார். கடந்த ஆண்டளவில் தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

வரசித்தி விநாயகர் ஆலயத்தில் முக்கிய தொண்டராக விளங்கினார். இயல்பாகவே பாடும் திறனும், கலை ஆர்வமும் கொண்ட அவர் வரசித்தி விநாயகருக்கான பாடல்களை எழுதி இசைத்தட்டாகவும் வெளியிட்டார். வரசித்தி விநாயகர் கோவில் பிரதம குருக்களால் அருட்கவி என்ற பட்டத்தைப் பெற்றார். முன்னாள் இலங்கைத் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் கழகத்திலும் முக்கிய பதவிகளை ஆற்றி வந்தார்.

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தில் அமரர் பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர், கவிநாயகர் வி.கந்தவனம் ஆகியோர் நடத்திய யாப்பிலக்கண வகுப்பில் இணைந்து செவ்வனே கற்ற கவிஞர் எண்மரில் ஒருவராக, மரபுக்கவிஞராகப் பவனி வந்தார். தனது இரண்டு ஆசான்களிடமும் அளவற்ற குருபக்தி கொண்டவராக விளங்கினார். தன்னோடு யாப்பிலக்கணம் பயின்ற கவிஞர்களுடன் நல்ல நட்புடன் பழகி வந்தார். எப்போதும் கலகலப்பாகவே பழகும் இயல்பு கொண்டவராக விளங்கினார்.

சந்தமுடன் பாடல் எழுதுவதிலும், கும்மிப் பாடல்களை விரும்பி எழுதுவதிலும், அரங்கம் மகிழச் சந்தத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பதிலும் வல்லவராக விளங்கினார். எல்லோரையும் வாழ்த்தி வாழ்த்துப்பாக்கள் எழுதுதல், கண்ணீர் அஞ்சலி எழுதுதல், திதி வெண்பாக்கள் எழுதுதல் , கல்வெட்டுக்கள் எழுதுதல், இசைப்பாடல்களை எழுதி வெளியிடல், கவிதைத் தொகுதி நூல்களை எழுதி வெளியிடல் போன்ற செயற்பாடுகளில் அதிக ஆர்வம் கொண்டு செயற்பட்டார்.

தனது கவிதை நூலினைத் தமிழகத்திலும் வெளியிட்டுப் பல தமிழகக் கவிஞர்களின் பாராட்டினையும் பெற்றார்.

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் இரண்டாவது தலைவராகப் பணியேற்றுச் சிறப்பாகத் தனது கடமைகளைச் செய்து வந்தார். அதன்பின்பும் இன்றுவரை பல பதவிகளை வகித்துப் பணியாற்றி வந்தார். பல கவியரங்குகளில் கலந்து கவிபாடி கவியரங்குகளைச் சிறப்பித்து வந்தார்.

உலகக் கவியரங்குக் குழுவிலும் இணைந்து உலக சாதனை நிகழ்ச்சிகளிலும், கவியரங்குகளிலும் பங்கேற்று வந்தார்.

வானொலியில் பல கவிதை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தில் இணைந்து பொருளாளர் , நிர்வாகசபை உறுப்பினர் போன்ற பதவிகளை வகித்துச் சிறப்பாகப் பணியாற்றினார். கடந்த ஆண்டிலிருந்து மீண்டும் பொருளாளராகித் தனது சுகயீனத்தால் பணியாற்ற முடியாத நிலையிலும் இறுதிக்கட்டம் வரை தன்னால் இயலுமானளவு கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தில் பணியாற்றி வந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் இவருக்குப் பாவலர் விருது வழங்கி மதிப்பளித்தது. தனது துணைவியாருடன் இணைந்து திருமண சேவையினையும் வழங்கி வந்தார்.

ஆன்மீக ஈடுபாடு கொண்டவராகவும், சிறந்த கவிஞராகவும், நூலாசிரியராகவும், கலைஞராகவும் பாடலாசிரியராகவும், சமூக சேவையாளராகவும், எல்லோருடனும் அன்புடன் பழகி வந்த அருட்கவி ஞானகணேசன் இன்று எம்முடன் இல்லை. ஆனால் அவரது நினைவலைகள் எங்கள் இதயத்தை விட்டு நீங்காத தன்மை கொண்டவை. கனடாத் தமிழ்க் கவிஞர் கழக வரலாற்றில் அவரது பங்களிப்பும், கவிபுனையும் திறனும், நட்பின் மகிமையும் அழியாத இடத்தைப் பெற்றுக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை. இவரது பங்களிப்பு முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் கழகம் - கனடா வரசித்தி விநாயகர் ஆலயம், கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் ஆகியவற்றிலும் தனித்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்க இவர்புகழ் வையகம் எங்குமே



**அகணி சுரேஸ் B.Sc. Eng, M.Sc**
முன்னாள் தலைவர், கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்
முன்னாள் தலைவர், கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழி முத்தமிழ் செந்தமிழ்த் தேனே!
## (ஆனந்தக் களிப்பு)
## ஆக்கம் : பாவலர் அகணி சுரேஸ், கனடா



எடுப்பு
தந்தன தந்தன தேனே - தமிழ்த்
தாய்மொழி முத்தமிழ் செந்தமிழ்த் தேனே!

முடிப்பு
வள்ளுவர் வாழ்வியல் தமிழ் - நல்ல
மரபும் தொன்மையும் விந்தையும் தமிழ்
உள்ளத்தின் காதலும் தமிழ் - நல்ல
உயிரில் கலந்த உணர்வும் தமிழ்!

சித்தரின் வைத்தியம் தமிழ் - நல்ல
சீர்பெறு சான்றோரின் நூல்களும் தமிழ்
புத்தியின் வித்தகம் தமிழ் - நல்ல
புலமைப் படைப்பும் பண்பும் தமிழ்!

தொல்காப்பி யநூலும் தமிழ் - நல்ல
தொன்மையும் மேன்மையும் எழுமையும் தமிழ்.
ஒல்காப்பு கழுடைத் தமிழ் - நல்ல
உயிர்ச்சொல் எழுத்தும் பொருளும் தமிழ்.

அழகு மொழியும் தமிழ் - நல்ல
ஆடலின் கலையும் இசையும் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழவர் இனமும் தமிழ் - நல்ல
உழைப்போர் கூட்டமும் வீரமும் தமிழ்.

பல்கலைக் கழகத் தமிழ் - நல்ல
படிப்பை வழங்கும் இருக்கைத் தமிழ்.
வல்லதாய் ஓங்கிடும் தமிழ் - நல்ல
வளங்கள் பெருகியே நிலைக்கும் தமிழ்.

எத்தனை விந்தைகள் தமிழ் - நல்ல
இன்பத்தைத் தந்திடும் தேன்சுவைத் தமிழ்.
இத்துணைப் பேறுகள் தமிழ் - நல்ல
ஈகையும் பத்தியும் அறமும் தமிழ்

தாய்மொழித் தமிழே வாழி - நல்ல
தேன்மொழித் தமிழும் செப்பிட வாழி.
ஆய்வுகள் ஓங்கிட வாழி - நல்ல
அரங்கில் செழித்து வாழிய வாழி.

**கவிதை**

மூளையை நோக்கிப் பயணம் செய்கின்ற கவிஞன்
இதயத்தை விட்டு விட்டுப் புறப்படுகின்றான்.
இதயத்தை விட்டு விடும்போது இனிய
உணர்வுலகத்தை விட்டு விடுகின்றான்.

கவிக்கோ அப்துல் இரகுமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபூமி நாடி (எண்சீர் விருத்தம்)

**ஆக்கம் : அம்பிகா வாசுதேவன், அமெரிக்கா**



இலங்கைவேந்தன் ஆண்டானே ஈழத்தின் பத்தன்
இலங்குகின்ற ஈச்சரங்கள் சிவபூமி எங்கும்
கலந்தனவே கண்களெனக் கலையாத வடிவம்
காட்சிகளும் மாட்சிகளும் கற்சிலையில் சைவத்
தலங்களுடன் வாழ்வினையும் தணிக்காமல் தமிழர்
தனிச்சிறப்பு வரலாற்று ஆலயங்கள் மீதே
நிலந்தனிலே நாமெல்லாம் நமசிவாய நாமம்
நீக்கவில்லை நீயிருந்தும் பயனேதும் உண்டோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச்சரங்கள் தொகுத்தோமே பத்தியுடன் நாளும்
பணிந்தோமே பாதிசிவன் பார்க்கலையே இனத்தைப்
பூச்சரங்கள் தொடுத்தேநாம் பூரித்துப் போனோம்
புதைகுழியில் கிடக்கையிலும் புரியவில்லை உனக்கே
ஈச்சரங்கள் மண்தனிலே இடித்தழிப்புச் செய்யும்
ஈனர்தம் இழிசெயலை ஈர்த்திடலும் முறையோ
கூச்சலிலே போக்குகின்றோம் கூடவில்லை நன்மை
குழிதோண்டும் தொல்பொருளில் மறைவாயோ இறைவா!

சிவனொளியாய் உன்பாதச் சுவடுகளும் தேடிச்
சிந்துகின்ற வேதனையில் தேசத்தை அறியீர்
அவனின்றி ஓரணுவும் அசையாத படைப்பில்
அகிலத்தை ஆடவைக்கும் அற்புதமே நேசா
அவலத்தின் குரல்களுக்குள் அணுக்குண்டை இறைத்து
அன்னைமண்ணில் அகதிகளாய் ஆக்கிடுவர் அழித்து
கவனத்தில் கொள்ளாத கடவுளாகிப் போனீர்
கண்ணீரால் கரைந்தோடும் கவலையிலே வாழ்வே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசிவன் இலிங்கமுமாய் அடர்காட்டு மலையில்

ஆண்டவனே எம்மையெல்லாம் போராட வைத்தே

போதிமரம் முளைக்கிறதே புத்தமதம் ஆளப்

பொங்கியெழத் தமிழர்க்குப் போதிப்பீர் என்றோ

ஏதிலியாய் எம்மவரை இதுகாறும் வீழ்த்த

எழுந்தருளி இருந்தாயோ வெடுக்குநாறி மண்ணில்

ஆதிகுல நாகரென்போர் ஆண்டவனைத் தொழுதோர்

அவர்வழியே சிவன்பணியை ஆற்றுவமே மகிழ்ந்தே!

**கவிதை**

தயாரிக்கின்ற கவிதை வேறு. தானே பிறக்கின்ற கவிதை வேறு, இரண்டிற்குமிடையே பொம்மை தயாரிப்பதற்கும் குழந்தையைப் பிரசவிப்பதற்கும் உள்ள வேறுபாடு உண்டு. பிள்ளையைப் பெற்றுவிட்டுப் பெற்றவளே வியப்பதைப்போலத்தான் தன் கவிதையைப்பார்த்துக் கவிஞன் வியக்கிறான்.

கவிக்கோ அப்துல் இரகுமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னோவியம் (நேரிசை ஆசிரியப்பா)

**ஆக்கம் - தேசபாரதி பாவலர் வே. இராசலிங்கம், கனடா**



சின்ன வயதில் சிலாகித் ததனால்

அன்னைத் தமிழாள் அணிகலம் ஆனாள்

வாழ்நாள் சாதனை யாளர் விருதும்

கோள்நாள் எல்லாம் குறிக்கவே வந்தன

போநாள் பாடிப் புல்லரித் திடும்நாள்

மீனாள் மீண்டும் மோகனம் கொடுத்தாள்

புதிய பாரதி அதிசயம் சொல்லி

இதிகா சம்போல் ஏடெலாம் அளித்தாள்

பட்டம் பலப்பல விட்டம் கொடுத்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவையாய் இருந்தே தோகையாய் விரிந்தாள்
வாழும் தமிழைத் தோழனாய்ப் புரிந்தாள்
படித்தது கொஞ்சம் பிடித்தது கொஞ்சம்
முடித்தது நெஞ்சம் வெடித்தது பஞ்சென
அடித்த போதிலும் கிடைத்தது கொஞ்சமே
காணாப் பொழுதினில் நாணா திருந்தவள்
என்தமிழ் தன்னை மின்னுரு வாக்கினாள்
அன்னை யவளென்னை அடைக்கல மாக்கினாள்
பொன்னை யுருக்கிப் புதுநகை செய்தாள்
பின்னாள் இருந்து பீடினைத் தந்தாள்
அன்னை அவளால் அகிலமும் ஆனதால்
தொன்மம் சீர்பெறத் தூக்கிய திருவடி
அன்பும் அறனும் அமைந்தாள்
மன்பதை உலகம் மகிழ்ந்தது வாமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவியாசான் கவிநாயகர் கந்தவனம்

(நேரிசை வெண்பா)

**ஆக்கம்: பாவலர் இராஜ்மீரா இராசையா, கனடா**



செந்தமிழ், சைவம் செகத்திடை நில்நிலையில்
நந்தவன மாக்கி நலங்காத்தார் - சிந்தைமகிழ்
சிற்றூர்கொள் பேரூர்கொள் சீர்த்தலங்கள் பாடியும்
பற்றுடன்பல் நூல்படைத்தார் பார்.

பார்சிறக்க வாழ்ந்தநற் பண்பாளர் பல்லோரை
நேர்நிறுத்தி வெண்பாவில் நேயமாய்ச் - சீர்போல்
வடித்த கவியெலாம் வல்லகவி யாசான்
துடிப்பினைக் காட்டிடும் தூண்

தூணாகிச் செந்தமிழர் தாம்மதி தந்தையாகித்
தேனாய் இனிக்குஞ்சொல் சேர்த்துமே- வானோரும்
வாழ்த்துவகை பேசிடும் வல்லோனென் ஆசானே
சூழ்கவி போதித்தார் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானறி கல்வி தரணியோர் பெற்றிட
நானிலத்துப் பல்லிடம் நாடியே - காணரிய
ஆசிரிய சேவை அதிபர் பணியுமெனத்
தேசங்கள் கண்டார் சிறப்பு.

சிறப்பாய்க் கவியரங்கம் சீர்பட்டி மன்றம்
முறையொடு செய்து மிடுக்காய்ப் - பிறப்பின்
பயனைப் பிறர்க்கும் பகிர்ந்த இனியர்
நயந்து நடிப்பரும் நன்று.

நன்றே கவிதைகள் நாமெழுதத் தூண்டியவர்
மன்றுபல சென்றுமே வல்லதமிழ் - பண்டு
முறையிற் பயன்படுத்த வைத்தகவி ஆசான்
மறைகளில் வாழ்வரே மாண்பு.

**கற்பனை**

கவிதை கற்பிக்கின்ற கற்பனை உலகமானது நிசமான உலகைவிட எத்தனையோ மடங்கு அழகுடையதாக இருக்கிறது. கற்பனைத் தேரில் ஏறிச்சென்றால் நிச உலகில் காணவேண்டுமென்று எத்தனை நாள் தவித்தாலும் காணமுடியாத பேரின்பக் காட்சிகளையெல்லாம் கண்டு களிக்கலாம்.

ஆ. முத்துசிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவினைப் பெருக்கிடு (அறுசீர் விருத்தம்)
## ஆக்கம் - கவிஞர் இறாஜினி சுபாகரன், கனடா



கல்வியைக் கண்ணெனப் போற்றியே
களிப்புடன் அறிவினைப் பெருக்கிடு!
சொல்லிலும் செயலிலும் என்றுமே
சொற்சுவை இருந்திடல் வேண்டுமே!
நல்லன தீயன இரண்டிலும்
நன்மையும் தீமையும் உள்ளதே!
நல்லவர் வாழ்வினில் என்றுமே
நல்லவை நடப்பது உறுதியே!

கற்பதால் அறிவினைக் கூட்டிடு
கவலையைத் துரத்தியே விரட்டிடு
சுற்றமும் சொந்தமும் தருபவை
சுமக்கவே முடிந்திடாச் சுமைகளே!
பற்பல வெற்றிகள் வந்துமே
பாரினில் உன்னையும் உயர்த்திடும்
கற்றவர் கூறிடும் சொற்படிக்
கற்றிடல் உயர்வினை வழங்குமே!

அறிவையும் அன்பையும் பெருக்கியே!
அறத்தினைப் போற்றிடு உலகினில்
நெறியினை நல்லதாய் அமைத்திடு
நேர்மையைக் கடைப்பிடி உயரவே!
அறிந்திடு நல்லதை நூல்களில்
அறவழி அவ்வழி சென்றிடு
பொறித்திடும் பொன்னிலும் பெயரினைப்
போற்றியே மானிடம் வாழ்த்துமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலியாண்டுச் சிறப்பு

### (நேரிசை வெண்பா)

**ஆக்கம்: பாவலர் கனி விமலநாதன். கனடா**



பம்பர ஞாலம் பயன்பெற ஞாயிறை
வம்பெனச் சுற்றுதல் விந்தையே - நம்முன்னோர்
தந்த பொழுதாம் இருவகைத் தேர்வினில்
வந்ததே நாள்காட்டி வார்ப்பு.

அறுபது நாழிகை ஆக்கிடும் நாள்கள்
பெறுமே சுழல்முறை ஏழு - பெறுமதித்
திங்கள் அசைவின் தெளிதரு பன்னிரு
மங்காத மாத வழகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் கிழமை நிலவதன் திங்களுக்கும்
சூட்டினோம் ஓரொழுங்குச் சுற்றினை - காட்டிய
ஆண்டாறு பத்துத் தொகுப்பும் அருந்தமிழர்
மாண்டிடா நல்லறிவின் மாண்பு.

வகுத்த பொழுதின் வழிவரு ஆண்டுத்
தொகுப்பெமது ஞானத் தெளிவு - தகுதிக்
கணக்கில் அறுபது ஆண்டுக் கடப்பில்
கணக்காய் ஒருநாள் கழிப்பு.

தப்பாப் பருவம் தரணிக் கமைந்திட
ஒப்பிற் கலியாண்டு வந்தது - தப்பின்றிச்
சுற்று முடிவில் ஒருநாள் அகற்றிடக்
கற்பிக்கும் ஒப்பில் கணிப்பு

கலியின் பழுதுக் கணிப்பிதென யாரும்
கிலிகொள்ள வேண்டாம் இனியும் - பலியாய்
எமதறிவை என்றும் அளியோம் அவற்றைத்
தமதெனச் சொல்வோர் தமக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் தோய்ந்த கதை (நேரிசை வெண்பா)

## ஆக்கம் - பாவலர் க. குமரகுரு, கனடா



எங்கள் தமிழ்மொழிக் கின்னல்கள் ஏற்படச்
செங்களம் ஆடினோர் செங்குருதி - எங்குமே
மண்சிவக்க மாண்ட மறவர் துயரெல்லாம்
கண்ணீரில் தோய்ந்த கதை.

முள்ளிவாய்க்கால் தந்தவலி மூச்சை நிறுத்தியது
தள்ளாடும் மூத்தோர்கள் தாய்பிள்ளை - முள்வேலி
முன்னால் முகாமில் உயிர்மாய்த்த கோரமது
கண்ணீரில் தோய்ந்த கதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சம் புகுந்தோர் தமதுயிரைக் காப்பதற்கே
கஞ்சியும் இன்றிக் கலங்கினார் - வஞ்சகர்கள்
கண்முன் இரக்கமின்றிக் கொன்றொழித்த காட்சியது
கண்ணீரில் தோய்ந்த கதை.

கல்வியில் வல்லான் கருணை மனமுடையான்
சொல்வல்லான் எந்நாளும் சோர்விலான் - நல்லாசான்
மண்ணில் தொடராமல் வாழ்வை நிறுத்தியது
கண்ணீரில் தோய்ந்த கதை.

நண்பனாய் மந்திரியாய் நல்லா சிரியனாய்ப்
பண்பிலே தெய்வமாய்ப் பாசத்தில் - அன்னையாய்
என்னையே தாங்கிய என்நண்பன் பேரிழப்போ
கண்ணீரில் தோய்ந்த கதை.


இலங்கைத் தமிழர் இருப்பிடம் தேடிப்
புலம்பெயர்ந் தார்புதிய நாட்டில் - நலம்பெறவே
இந்நாள் வரையுழைக்கும் ஏதிலியர் வாழ்க்கையோ
கண்ணீரில் தோய்ந்த கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாகத்திற்கு என்ன பதில்?
(அறுசீர் விருத்தம் )

**ஆக்கம் - குறிஞ்சிக்கவி சி. கி. ஆனந்தன், கனடா**



பொங்கி யெழுந்தார் புறப்பட்டார்
 புலிகள் சேனையில் அணிவகுத்தார்
சங்கத் தமிழைக் காப்பதற்காய்
 சாகத் துணிந்தார் களஞ்சென்றார்
புங்கை அருகில் மறைந்திருந்தே
 புலிபோல் உறுமிப் போரிட்டார்
தங்கை தம்பி வாழ்வதற்காய்த்
 தமிழ்மண் காக்க வீழ்ந்திட்டார்.

கண்ணீர் சொரிய விழவில்லை
 களத்தில் வீழ்ந்தார் விடுதலைக்காய்
புண்ணில் வடியும் குருதியினைப்
 புவிக்குப் பாய்ச்சி வித்தானார்
எண்ணில் அடங்காச் சாதனைகள்
 எமக்காய்ச் செய்து வீழ்ந்தார்கள்
மண்ணில் போற்றி வணங்கிடுவோம்
 மறவர் வாழ்வைப் படித்திடுவோம்.

ஏற்றி வைப்போம் நெய்விளக்கை
 ஏந்திச் செல்வோம் காந்தளினை
போற்றிப் பாடித் துதித்திடுவோம்
 பொய்மை யற்றே வணங்கிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்று நட்ட நெல்வயல்போல்
  நாங்கள் ஒன்றி வாழ்ந்திடுவோம்
வேட்டு இன்றி விடுதலைக்காய்
  வேள்வி செய்வோம் விருப்புடனே.

யாகம் செய்தோம் உங்களுக்காய்
  யாக்கை கொடுத்தோம் மண்ணுக்கே
தாகம் தணிந்து போகவில்லை
  தரணியில் வீழ்ந்தோர் கேட்கின்றார்
மோகம் கொண்டே உழைத்திடுபோய்
  மோன நிலையைத் தவிர்த்திடுவாய்
வேகம் சற்றே தளர்ந்துவிட்டால்
  வெளியார் நிலத்தைக் கொள்வாரே.

சாவின் தேதி தெரிந்திருந்தும்
  சலன மின்றிப் போரிட்டார்
ஆவும் கன்றும் மகிழ்வுடனே
  அமைதி யுடனே வாழ்வதற்கு
கோவி னாணை ஏற்றிட்டார்
  கொள்கைக் கென்றே உயிர்மாய்த்தார்
பாவி னுள்ளே யவர்வாழ்வைப்
  பாரே கேட்கப் பாடிடுவோம்.

தேசம் பார்த்து வணங்கிடுவோம்
  தெய்வம் வாழும் கல்லறையை
நேசம் கொண்டே காந்தளினை
  நெஞ்சில் ஏற்றிப் போற்றிடுவோம்
வீசும் காற்றி லவர்மூச்சை
  விசும்பில் தேடிப் பிரித்தெடுத்துப்
பேசும் தமிழிற் குணர்வூட்டிப்
  பிறந்த மண்ணிற் குயிர்கொடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்திசையும் உனதே! (எண்சீர் விருத்தம்)

**ஆக்கம்: கவியாசான் பாவலர் மாவிலி மைந்தன் சி. சண்முகராசா, கனடா**



பெண்ணுக்குள் புதைந்துள்ள பேராற்றல் நூறு
பெருமைக்குப் பெருமையெனப் புகழாரம் சூடு
எண்ணத்தில் மாற்றத்தை ஏற்றிவிடு போதும்
எழுகின்ற எரிமலையாய் உன்வலிமை மோதும்
விண்வெளியில் விரைபுனலில் விளையாடி வந்தோர்
விசையுற்ற பந்தாகிப் போர்முனையில் நின்றோர்
எண்ணற்றோர் புலிகளவர்! எலிக்கூட்டம் அல்ல
எழுதிவைத்தார் வரலாற்றை, ஏற்றுமுன்னே செல்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிக்கும் கவர்ச்சிக்கும் கருசுமப்ப தற்கும்
கட்டிலுக்கும் அட்டிலுக்கும் கணவனது பணிக்கும்
கூட்டிநிலம் மெழுகுதற்கும் கோலமிடு வதற்கும்
குடும்பமெனும் வண்டியினைக் கொண்டிழுப்ப தற்கும்
வீட்டுக்கு விளக்கேற்றி விருந்துவைப்ப தற்கும்
வித்தையெலாம் கற்றவள்தான் பெண்ணென்று சொல்லி
ஆட்டுவித்தல் அடக்கிவைத்தல் ஆகாது உந்தன்
ஆளுமையை ஆற்றலினை அழியவிட வேண்டாம்!

காத்திருக்குப் பேருலகம் கைகுலுக்கிக் கொள்ளு
கட்டுகளை உடைத்துவிடு கடமைகளை வெல்லு
பூத்திருந்து உலர்ந்துவிழும் பூவாக வேண்டாம்
புதுமையிலே புரட்சியிலே பொங்கியெழு புயலாய்ச்
சாத்திரங்கள் சாகுமுந்தன் சாதனைகள் கண்டே.
சாற்றிவரும் நின்பெருமை சரித்திரமும் நாளை
ஏத்தியுனைப் பாடுதற்கே எழும்கவிதை கோடி
எழுக!விழி! சிறகைவிரி! எண்திசையும் உனதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைமலை அடிகள் (குறள் வெண்செந்துறை)

**ஆக்கம் - பாவலர் சோக்கெல்லோ சண்முகநாதன் (ஆறுமுகத் தலைவன்), கனடா**



தமிழறிஞர் மறைமலையின் தனித்தமிழின் பற்றாலே

தமிழரெல்லாம் தலைநிமிர்ந்தார் தமிழ்க்கடலின் தொண்டாலே

தமிழோடு சிவஞானம் தழைப்பதற்குப் பாடுபட்டார்

தனித்தமிழின் தந்தையான தவசீலர் முருகவேலார்!

ஐம்பத்தி நான்குநூல்கள் அச்சிட்டு வெளியிட்டார்

அதிலேயும் பலநூல்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகள்

மும்மொழியில் ஞானமுடை முனிபுங்கர் பல்லாவரம்

மூத்தமொழிப் புலமைபெற்றார் முன்னவரின் துணையோடே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபத்தைந் தாண்டுவரை இளமையுடன் தொண்டாற்றி
எண்ணற்ற எழுத்துருவம் மேற்கொண்ட துறவியவர்
பழுதில்லா வாழ்வுக்கு பகுத்தறிவு வேண்டுமென்றார்
பத்திமிகக் கொண்டமுனி பரிதிமாற்க லைஞரிடம்

வள்ளலார் வழிநின்ற மறைமலையார் வடமொழியில்
வல்லவராம் வாழ்வெல்லாம் தமிழ்வளர்த்த செம்மலவர்
கள்ளமில்லா நெஞ்சத்தார் காத்துநின்றார் செந்தமிழைக்
கடலானார் தமிழ்மொழியில் கருணையுள்ள அடிகளுமே!

முருகவேல் - அடிகளாரின் புனைபெயர்

முனிவர் பல்லாவரம் - அடிகள் இவ்வாறும் அழைக்கப்பெற்றார்

முன்னவர் - பரிதிமாற் கலைஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணெனும் பேராற்றல் (நிலைமண்டில ஆசிரியப்பா)

**ஆக்கம் - பாவலர் மார்க்கம் சந்திரன், கனடா**



தாய்மையால் பூமிக்குத் தனித்துவம் தருபவள்

வாய்மையால் வெல்லும் வல்லமை கொண்டவள்

எளிமையில் விதையவள் எதிர்த்தால் மலையவள்

பழிபாவம் பார்ப்பவள் பாசத்திற் கேங்குபவள்

கடமையில் கதிரவன் கடுமையில் எரிமலை

கொடுமையை எதிர்ப்பவள் கொடுப்பதில் நிகரவள்.

சீர்மையில் சிற்பமவள் சிந்தையில் சிறந்தவள்

சேர்க்கையைக் காப்பவள் சேவகம் செய்பவள்

துணையவன் நிழலவள் தூய்மை உளமவள்

துணைக்கு உறவவள் தோழமைக் கேங்குபவள்

வீட்டினுள் அடைந்தவள் விசும்பியே வெந்தவள்

பாட்டினுள் பாரதியும் புரட்சியை வெடிக்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டின் புலிகளாய்க் கர்ச்சித்துப் புறப்பட்டு
நாட்டின் நலனுக்காய் நலம்பல செய்தவள்
வேலு நாச்சியார் வீரம் போன்றே
நாளும் பொழுதும் நாட்டுக்காய் உழைத்தவள்
ஆயுதம் ஏந்தியே அன்னியரை அழித்தவள்
பாயும் புலியாய்ப் பலகளம் கண்டவள்
எட்டாத கல்வியை எட்டியே பிடித்தவள்
எட்டும் வரைசென்று எல்லைகள் தொட்டவள்
பூட்டிய கதவைப் புத்தியால் திறந்தவள்
போட்டி போட்டுப் புதுமைகள் செய்தவள்
'பெண்ணெனும் பேராற்றல்' பெற்றவர் தம்மைக்
கண்ணெனக் காத்துக் காசினியில் உய்வோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்மடியில் கண்ணுறங்கம் மன்னவர்கள்

**ஆக்கம்: கவிஞர் மானியூரான் சயந்தன் பசுபதி, கனடா**



மண்மலரும் நினைவோடு கண்ணுறங்கும் வேங்கைகளே!
எண்ணுகிறோம் உங்களையே எந்நாளும் நினைவினிலே!
தமிழீழம் தனைவெல்லத் திமிர்கொண்ட வீரம்
களமீதில் கயவரினைக் கருவறுத்த தீரம்!
எம்மறவர் குருதியிலே குளித்ததெங்கள் ஈழம்
நாம் கொடுத்த விலைகள் கொஞ்சமில்லை
எம்விடியற் பொழுதும் தூரமில்லை
உரமேறி வரியாகி உருமாறும் தேகம்
கருவோடு வீணர்தமை களைந்தாடும் வேகம்
தாயான தமிழ்மண்ணில் திளைத்திட்ட தாகம்
ஓயாத அலையாக அடித்திட்ட நேரம்
சேயாகத் தாய்மடியில் துயில்கின்ற கோலம்!
சன்னப் பூக்களை நெஞ்சில் தாங்கிய
வண்ணக் கனவுகளே மின்னல் சிறகுகளே
எண்ணில் அடங்காத மண்ணின் விருப்போடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்மூடிச்சென்ற வேங்கைகளே!
வித்தான தாய்மண்ணில் முத்தாக முகிழ்ந்தெழுந்த
சொத்தான சொந்தங்களே
இத்தரை மீதெங்கும் இரத்தம் சிந்தியொரு
வித்தகம் செய்தவரே!
நித்திய வேள்வியில் முத்திரை பதித்தவரே
தாய்நிலத்தே நித்திரை கொள்பவரே!
மாவீரர் மறைவதில்லை
அவர்நினைவு அழிவதில்லை
சாவீரர் சரித்திரங்கள் எந்நாளும் மறப்பதில்லை!
ஈழத்தாயவளின் மடியினிலே குருதி ஈரம் காயவில்லை!
முல்லைக் கடல் மடியின் ஓலமின்னும் ஓயவில்லை!
நித்தம் உம்நினைவோடு
சித்தம் நிறை உணர்வோடு
மொத்தமாய் வந்தும்மை வணங்குகிறோம்!
அன்னைத் தமிழ் வாழும் வண்ணக் கனவோடு!
காலமினி மாறும் ஞாலம்தலை சாய்க்கும்
காலைவிடி வெள்ளி வானிலது பூக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் மகிழ்ந்த கிராமியம் (எண்சீர் விருத்தம்)

**ஆக்கம் - பாவலர் சுகந்தி மார்க்கண்டு, கனடா**



உழவர்கள் வயல்நோக்கி அணிவகுக்கும் காலை
ஊர்விழிக்க முன்னாலே 'உரப்போசை' கேட்கும்
பழனங்கள் களைகட்ட பசுமைதலை நீட்ட
பள்ளங்கள் ஆவலொடு வருநீரைத் தேக்கும்
நிழல்மரங்கள் கீழமர்ந்து பசிதீர்க்கும் நேரம்
நெஞ்சத்தில் எதிர்காலக் கற்பனைகள் ஊறும்
தழல்வெய்யோன் கதிர்யாவும் கீழ்வானில் வீழத்
தன்வீடு திரும்புகின்ற காராளன் வாழ்வே!

கதிர்சுமந்த நெற்பயிர்கள் காற்றினிலே ஆடும்
கதிர்குடிக்கக் குருவிகளும் குழுவாகக் கூடும்
புதிரெடுத்துக் கொண்டாடிப் பொழுதெல்லாம் தாண்டிப்
பொன்போலக் காத்திருந்த கதிர்பொலிய வேண்டி
மதிநிறைந்த நன்னாளில் மடைபரப்பி அன்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வோடு பொங்கலிட்டு மாண்புடனே ஒன்றாய்
பதிபோற்றும் எம்மூரார் பண்புநிறை வாழ்வு
பழம்பெருமை கூறுகின்ற சங்கதிகள் அன்றோ.

ஆவணியில் மாரியம்மன் அருள்வேண்டிக் கூடும்
அடியவரின் வேண்டுதல்கள் ஆகாயம் முட்டும்
பூவணிந்து பொட்டிட்டுப் பொலிவோடு பெண்கள்
புன்னகையில் பூப்பூக்கும் பேதையரின் கண்கள்
பாவணியால் தாலாட்டத் தாயவளின் சிலிர்ப்பு
பறைமுழங்கக் காவடிகள் ஆடிவரும் உயிர்ப்பு
தாவணியில் பொலிபவர்கள் தலையினிலே கரகம்
தாங்கிவரும் அழகெல்லாம் கொண்டதெங்கள் ஊரே!

தொடருந்து நிலையத்தில் திருநாளாய்க் கூட்டம்
தொலைதூரப் பயணிகளோ துயிலின்றி வாட்டம்
கடமைக்கு வருகின்ற அயலூரார் நாளும்
காத்திருக்க ஆங்காங்கே காவிருக்கை நீளும்
படம்பார்த்து நடுநிசியில் வீடுவரு வோர்கள்
பயமின்றி ஆலயத்து விளக்கொளியில் நடப்பர்
குடமுழுக்குக் கண்டிருந்த குமரனவன் கோயில்
குறைவின்றி எம்மூரைக் குளிர்விக்கும் சிறப்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகிய தமிழே!

ஆக்கம் - கவிஞர் செல்வி மயில்வாகனம், கனடா



அன்னை மொழியே தமிழே
அள்ளிப் பருகும் பேரமுதே
அதியுயர் பெருமை உடையவளே
அணங்கே உன்னை வணங்கிடுவேன்
காதில் ஒலிக்கும் பாடலிலுன்
கவிதை என்னைக் கவர்ந்திழுக்கும்
மேதினி தனிலெனை அரவணைத்த
மேதகு மொழியே போற்றிடுவேன்

நன்னெறி கூறும் ஈரடியும்
நல்வழி சொல்லும் நாலடியும்
சான்றுகள் காட்டும் கீழடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றும் உந்தன் தனிப்பெருமை!
பொன்னென மிளிரும் இலக்கியங்கள்
பொங்கிடும் இசையுடன் நாடகமும்
நுண்ணிய மலரிதழ் நோகாமல்
நுகரும் தேன்துளி போலிருக்கும்

ஏங்கும் பொழுதில் என்னுடனே
ஏக்கம் தீர்க்கத் துணையிருப்பாய்
தாங்க நீயும் இல்லையென்றால்
தாயே என்றோ தொலைந்திருப்பேன்
பொங்கும் அமுதாய் தமிழ்ச்சுவையைப்
பொழிந்து என்னை வாழ்விக்க
கங்குல் விலக்கி ஒளியேற்றிக்
கால மெலாமெனை ஆட்கொள்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம் (நிலைமண்டில ஆசிரியப்பா)

**ஆக்கம் - கவிஞர் தில்லைராணி பாலேஸ்வரன், கனடா**



உள்ளே உள்ளதை ஊற்றிடும் வெளியே
அள்ளி அணைத்தால் அன்பினைக் காட்டும்
பட்டெனச் சொல்லும் பட்டதை என்றும்
விட்டெறிந் தாற்போல் வீறாப் படையும்
மயக்கம் கொண்டு மந்தியைப் போலத்
தயக்க மின்றித் தாவிப் பாயும்
துக்கம் வந்தால் தூக்க மின்றிப்
பக்கம் நிற்கும் பாதியைக் கொல்லும்
எக்கதி வரினும் ஏளனம் செய்யினும்
அருளுக் கேங்கும் அநீதி எதிர்க்கும்
கருணை புரியும் காதல் கொள்ளும்
மர்மம் கண்டால் மதியைக் கேட்கும்
விட்டுக் கொடுப்பால் கெட்டுப் போகாது
கட்டுக் கடங்காக் கனவும் மனமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழைநாள் ( ஆசிரியப்பா)

**ஆக்கம் - கவிஞர் தேவகி விக்னேஸ்வரன், கனடா**



வானம் கறுத்து விண்ணும் அதிரக்
கான மயிலோ களிப்புடன் ஆட
வானரக் கூட்டம் வாவிக் குதிக்க
வான மகளோ மழையுரி போர்த்தாள்
ஆவினம் விரைந்து அடைக்கலம் தேடும்
மாவினம் எல்லாம் மறைவிடம் நாடும்
புள்ளினம் பறந்து புகலிடம் தேடும்
நூணல்கள் ஒலித்தே நாதம் கொட்டும்
நாணல் நிமிர்ந்து நகைத்து நோக்கும்
சொட்டுச் சொட்டாய்ச் சிந்தும் தூறலில்
சிட்டாய்ச் சிறுவர் சிலிர்த்து மகிழ்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலைகள் எல்லாம் இமைக்க மறந்து
தலைகள் தாழ்த்தித் தாள்தனைத் தொழுமே
பழனம் மகிழ்ந்து புன்னகை பூக்க
உழவன் மனமோ உவகை அடையும்
பொய்கை பொங்கி பூத்து மகிழும்
வாய்க்கால் நிறைந்து வழித்தடம் மாறும்
கயல்கள் துள்ளிக் களிப்பில் குதிக்கும்
புயலால் வயல்கள் புதுநீர் ஏற்கும்
பரவை எல்லாம் பொங்கித் ததும்பத்
தரணி எங்கும் தண்ணொளி பரவும்
வியத்தகு விந்தை விண்வெளி நிகழ்த்தும்
இயற்கை அளித்த வரமும் இதுவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் பெருமை

ஆக்கம் - கவிஞர் நாகேஸ்வரி சிவகுருநாதன்,
கனடா



தமிழே வணக்கம் என்தாயே வணக்கம்
தமிழா வணக்கம் என்இனமே வணக்கம்
தமிழின் பெருமையை நன்கே உணர்வாய்
தமிழைப் பேசித் தரணியில் உயர்வாய்

பிறமொழி பேசிப் பெருமைகொள் கின்றாய்
திறமை மிக்கஎம் மொழிமறக் கின்றாய்
தொன்மை மிக்க எம்மொழி பேசி
என்றும் நிலைக்க ஏதுவாய் இருப்பாய்

எந்தக் கருத்தையும் எடுத்தே உரைக்க
எம்மொழிக் கென்றும் ஆற்றலும் உண்டே
அன்னைத் தமிழின் அருமையைக் கண்டே
அனைவரும் கற்பார் ஆவலும் கொண்டே

சங்கம் வளர்த்த செம்மொழி தன்னைச்
சந்தம் நிறைந்த தமிழ்மொழி தன்னைச்
சந்ததி தோறும் நிலைத்தே நிற்கச்
சங்கற்பம் எடுப்போம் சாதனை செய்வோம்

வாடும் மக்கள் வாழ்வு சிறக்க
நல்ல பணிகள் நன்றே ஆற்றி
அல்லல் பட்ட மக்கள் வாழ்வு
சிறக்கச் செய்து சீருடன் வாழ்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறையே தமிழ் வேதம்
## (தரவு கொச்சகக் கலிப்பா)

**ஆக்கம் - பாவலர் கந்த . ஸ்ரீ பஞ்சநாதன், கனடா**



அரியவனார் முதல்வனாக அகிலமதில் வீற்றிருந்து
நரியினையும் பரியாக்கி நாதனாக ஆட்சிசெய்யும்
திரிசூலம் வைத்திருந்து திக்கெட்டும் காத்துவரும்
திரிசூலி யைப்பாகம் சேர்த்தவரே சிவபெருமான்!

பதிபசுபா சமென்கின்ற முப்பெரும் உண்மைகளை
நதிமூலம் பாய்வதுபோல் நாள்தோறும் அருள்கொடுத்து
அதிகாரம் செய்கின்ற ஆதிஅந்தம் இல்லாதான்
கதிஎன்று வந்தோர்க்கு கருணையினை அளித்தானே!

மனிதர்கள் உய்வதற்கு மாணிக்க மலைபோன்ற
தனிப்பெருமை கொண்டுள்ள தத்துவத்தின் வித்தைகளை
இனிதாகக் கொண்டுள்ள இணையில்லாத் திருமுறைகள்
அறிவுள்ள மந்திரங்கள் ஆற்றலுள்ள தமிழ்வேதம்!

மருந்தாக அமைந்திருந்து மனிதரையும் காத்துநின்று
திருமுறைகள் பாடுதற்கே திருவருளும் கொண்டதனால்
அருவுருவாய்ப் பெருமானும் அன்பாக மனம்வைத்துத்
திருவருளால் தமிழருக்குத் தெய்வீகப் பிறப்பளித்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்க்கு அனுப்பிவைத்தார் தரணியிலே வாழ்வதற்கு
அமுதான சைவநெறி ஆழமான கொள்கைகளை
கமழ்கின்ற சந்தனமாய்க் கடைப்பிடித்து உணர்வுடனே
தவிருங்கள் அந்தணரை, திருமுறையை ஓதிடுவீர்!

ஒவ்வொருவர் முறையாக ஊக்கமுடன் பத்தியுடன்
ஒவ்வொருநா ளும்ஒன்றாய் ஓதுவதால் அவர்கட்கு
அரனாரும் அன்புடனே அகம்மகிழ்ந்து உள்ளமர்ந்தால்
பரமனவன் பணியாலே பாரெல்லாம் சிறந்திடுமே!

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தில் கவியாசான் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா அவர்களால் நடத்தப் பெற்றுவரும் யாப்பிலக்கணம், மரபுக் கவிதைப் பயிலரங்க வகுப்புகளுக்குத் தவறாது வருகைதந்து பங்குபற்றியதற்கான சான்றிதழ் வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றவர்கள்

| | |
|---|---|
| 2022ஆம் ஆண்டு | ஆனந்தகிருஸ்ணன் மார்க்கண்டு |
| | அருளானந்தம் பொன்னுத்துரை |
| 2023ஆம் ஆண்டு | கிருஸ்ணானந்தன் சிதம்பரநாதன் |
| | ஐயாத்துரை விநாயகமூர்த்தி |
| | செல்வி மயில்வாகனம் |
| | ஹேமமாலினி சுஜானந் |
| | தில்லைராணி பாலேஸ்வரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடனே கேள்!
### ஆக்கம் - பாவலர் பவானி தர்மகுலசிங்கம், கனடா



மாற்றானின் வஞ்சனைக்குள் மாய்ந்துவிட்ட மனிதா!
மறத்தமிழன் நாமென்று மார்தட்டி நின்றாய்!
கூற்றாக உரைத்திருந்தாய், குவலயத்தி லன்று,
குலவுகின்ற பண்பிழந்தாய்! கொடியவனா யின்று!

வடதிசையின் பாலிருந்து வருகைதரு கின்ற
வலிமைதனை அழித்துன்னை வாட்டுகின்ற நஞ்சு!
இடர்மிகுந்த விடமான இழிபோதை தன்னில்
இசைந்தின்று வாழ்வுதனை யிழக்கின்றாய் ஏனோ?

சீர்மேவு தேன்தமிழின் செம்மையுறு தேசம்
பார்புகழும் இயற்கைவளப் பாங்குடை ஈழம் ,
கார்மேகம் சூழ்ந்ததோ? கயமைகள் சேர்ந்து
நேர்மையுடன், நியாயங்கள், நீதியும்போ யினவோ?

சந்திகளில் பொந்துகளில் சாக்கடையோ ரத்தில்
குந்திநீயும் கூடிநின்று குழுவில்சேர் கின்றாய்!
நிந்தையான பேச்சுக்கள், நிட்டுரங்கள் கண்டு
சிந்தைதாம் நொந்ததுவே! சீர்தூக்கிப் பாராய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகளும் விலங்குகளும் பார்மீதிற் கூடி
உறவுகளாய் மகிழ்ந்திருக்கும் உன்னதத்தைக் காண்க!
நறவெனவே இறைதந்த நவிலுமுயர் வாழ்வை
அறவழியில் பேணிநின்று அகிலத்தைக் காண்க!

அந்நியன்தன் காலடிகள் அகலமாகப் பதித்தே
இன்னுயிராம் எம்நிலத்தில் எளிதாகப் புகுந்தான்!
கன்னமிட்டுக் கைப்பற்றக் காத்திருக்கும் செய்தி
உன்மனதை வருத்தலையா? உன்மத்தம் ஏனோ?

காலமது கடக்கவில்லை, கண்ணியனாய் மாறு!
ஞாலத்தில் நீயாற்ற நற்செயல்க ளுண்டு!
சீலம்கொள் எண்ணத்தில் சீரான நோக்கில்
மேலவனாய் உனையுயர்த்தி மேதினியி லோங்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழே உன் நினைவே! (அறுசீர் விருத்தம்)

ஆக்கம் - கவிஞர் - புவனா கருணாகரன், அமெரிக்கா



குயிலேங்கிக் கூவும் போதும்
குறிஞ்சிப்பூ காணும் போதும்
மயில்தோகை விரிக்கும் போதும்
மழைமுகில்கள் படரும் போதும்
இயற்கையெனை அழைக்கும் போதும்
ஈரமணம் பரவும் போதும்
உயிர்த்தமிழே உன்னை யெண்ணி
உருகிப்போய்ப் பாடு கின்றேன்

மின்னல்வான் ஒளிரும் போதும்
மெல்லயிடி ஒலிக்கும் போதும்
அன்னப்புள் நீந்தும் போதும்
அழகுமான்கள் துள்ளும் போதும்
குன்றருவி கொட்டும் போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறத்தியெழில் காணும் போதும்
வண்டமிழே உனைநி னைந்தே
வணங்கிநான் பாடு கின்றேன்

வெண்ணிலவு புலரும் போதும்
வெண்முல்லை மலரும் போதும்
தண்தென்றல் தீண்டும் போதும்
தாய்நினைவு தாக்கும் போதும்
விண்மீன்கள் எண்ணும் போதும்
விரைந்தந்தி தீரும் போதும்
ஒண்டமிழே உனைநி னைந்தே
உளமாரப் பாடு கின்றேன்

நீளும்நாள் கடக்கும் போதும்
நீலமணி பூணும் போதும்
ஆழியலை நனையும் போதும்
ஐவனநெல் அறுக்கும் போதும்
ஏழுதிணை சுவைக்கும் போதும்
எழுத்தெண்ணிப் படிக்கும் போதும்
ஆளுகின்ற மொழியே உன்னை
ஆழ்ந்தேநான் பாடு கின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியைப் போற்றுவோம்

**ஆக்கம் - பாவலர்மணி முனைவர் புட்பா கிருட்டி, கனடா**



சிந்தனைத் தந்தை சீர்மிகு பாரதியை
வந்தனை செய்து வாழ்த்தி மகிழ்வோம்
நாடகக் காதலில் நன்னெறி புகட்டினார்
பாடலால் இந்தப் பாரினை ஏற்றினார்
கண்ணனைப் பெண்ணென கண்ணம்மா ஆக்கினார்
கண்ணினை விழிச்சுடர்க் காவியமும் கூட்டினார்
நிமிர்ந்த நன்னடை நேர்பார்வை ஞானமுடன்
திமிர்ந்த செருக்குடன் திருத்தினார் மாதரை
பெண்மை தன்னைப் பெருமையுறச் செய்திட்டார்
தண்மைக் குணத்துடன் தந்தார் அவள்புகழை
மண்ணில் வானம் மலர்ந்திட வைத்தார்
கண்ணிமை போலக் காதலையும் வளர்த்தார்
காதலால் கலவி கலவியால் கவலைபோக்கும்
ஆதலால் காதல் ஆழமாய்ச் செய்கவென்றார்
பெண்ணை அறிவுடன் பெருமையுறச் செய்தார்
மண்ணில் அவளுக்கு மகிமையும் தந்தார்
பழமைப் பேச்சும் பாவனை அற்றது
பழமையைச் சேர்த்துப் பாரினை மாற்றுக
நானும் கனவா? ஞாலமும் பொய்யா?
போனது கனவு புதுமைகள் படைக்குக!
ஆசை பாசம் ஆனவை எல்லாம்
நேசம் கொண்ட நெஞ்சிலே என்றார்
பாரதி வரிகளில் பற்றிடும் சிந்தனைத்தீ
பாரினை வாழ்விக்கும் பாமரரை நேசிக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழச் சிறப்பு (இயற் கும்மி)

**ஆக்கம்; பாவலர் மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை, கனடா**



நீலங் கரைத்தமென் நீர்த்தொட் டியுள்ளே
நீந்தாது நிற்கும் பரிசலைப்போல்
ஈழ மணித்திரு நாடு விளங்குது
இந்துமா ஆழி நடுவினிலே.

ஆட சவுந்தரி ஆட்சிசெய் தாள்முதல்
ஆண்ட இராவண மன்னனைப்போல்
பாடிடும் மீன்மட்டு வாவியில் தேனைப்
பருகிய இன்ப மகிழ்வினிலே.

கன்னியா வுள்ளது வெந்நீரி னூற்றதன்
காலம் மிகவும் பழையதென்பார்
தொன்மையாய் வந்தமர்ந் தார்கோ ணேசருந்
துறையு மியற்கை யமைந்ததுவே.

ஈழத் தமிழின மேற்றமா யென்றும்
எழிலொடு வாழிடம் யாழ்ப்பாணம்
ஆளு மினச்சிம்ம சொப்பன மாகவே
ஆகிநின் றார்கரி காலனுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துக் குளிகடல் மன்னார்த் துறையிலே
முந்தி யமர்ந்தவர் கேதீச்சர்
சத்தி நிறைமரி மாதாவு மொன்றாகச்
சங்கமித் தார்மடு வூரினிலே.

பண்டார வன்னிய னாண்ட நிலமது
பால்தேன் வயல்கள் நிறைபூமி
வென்று எதிரியை வாகைகள் சூடிடும்
வீரம் மிகுநிலம் வன்னியாமே.

**கற்பனை**

'கண்ணுக்கு மையழகு, கவிதைக்குப் பொய்யழகு' என்று கற்பனையைப் பொய்யாக்குவது பொருந்தமற்றது. கற்பனை என்பது பிறப்பித்தல் என்று பொருள். கவிஞன் தன் திறமையால் ஒரு பொருளில் முன் இல்லாத சுவையைப் பிறப்பித்தலே கற்பனையாகும். கற்பனை சிலவேளை மிகைப்படுத்தலாக இருக்கலாம்.

மாவிலி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமூலரின் தத்துவ முத்துக்கள் - ஆசனம்

**ஆக்கம் - வெண்பாப் புலவர் முருகேசு மயில்வாகனன், கனடா**



சித்தமே சிவனாகச் சிந்தித்த சித்தர்கள்
புத்தியைப் பாவித்தே புதுமைகளைக் கண்டவர்கள்
எத்திசையும் போற்றுகின்ற ஏற்றமுறு ஆசனத்தால்
சத்தியும் பெற்றார்கள் சாதாரண மக்களுமே.

அட்டாங்க யோகத்தில் ஐயமின்றி ஆசனத்தை
திட்டமிட்டுச் செய்வோரே சிறப்பாகச் சுகங்காண்பர்
முட்டவரும் பகைவரையும் முறையாக வெற்றிகாண்பர்
சிட்டாகப் பறப்பதற்கும் சிறந்தநற் பயிற்சிகளே!

பங்கயம் ஆதி பரந்தபல் ஆசனங்கள்
இங்கிதமாய் எழுந்தெமது ஏற்றநற் பயிற்சிகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கந்தன் ஏதென்று பார்த்து மகிழ்வீரே
மங்காத வாழ்வுக்கு மருந்துயோ காசனமாம்!

பங்கயம் ஆதி பல்வேறு ஆசனங்கள்
சங்கடம் இன்றியே சாதனை செய்வோர்க்குச்
திங்களும் சந்திரனும் மெய்யுள்ளே காண்பரே
அங்க அசைவினது ஆற்றலும் ஓங்குமே!

பத்திரம் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திரம் வீரஞ் சுகாதனம் ஓரேழும்
உத்தம மாமுது ஆசனம் எட்டெட்டு
பத்தொடு நூறு பல்லா சனங்களே!

பத்மாசனத் திருந்தே பரமனைச் சிந்தித்தால்
சித்தங் கலங்காது சிந்தனைகள் சீருறுமே
சித்திகள் பலபெறலாம் சீரான வாழ்முறைக்குச்
சத்தியமே நெஞ்சினில் சரணடைய வாழ்வுயரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை வளம் பெறவேண்டும்

(தரவு கொச்சக கலிப்பா)

ஆக்கம் - மைதிலி தயாபரன், இலங்கை



பசுமைதரும் அழகொன்றே பாரிற்பே ரழகாகும்
விசும்புதுளி வீழ்ந்தாலே வியனுலகும் விருத்தியுறும்
பசுபோலும் உயிரினங்கள் பாரினிடைப் பயனடையும்
வசுக்களெல்லாம் வரவேற்கும் வளம்பெருகும் நாடாகும்!

வரையறையாய் வானவெளி வழங்குமெனில் வையகமும்
தரையுயரும் விளைச்சலிலே தன்னிறைவு தனையடையும்
கரையுயரும் கல்வியிலும் கலைபெருகும் களிப்புறவே
திரைகடலில் தேடிவரும் திரவியமும் வேண்டுவதோ!

நிலமில்லை விளைச்சலுக்கு நித்தமுமாய் சொல்லுபவர்
இலமென்று அசையாமல் இருப்பார்கள் துயிலகற்றிக்
கலமென்ற கலப்பையினைக் கைகளிலே சுமந்துழைத்தால்
நலமிகுந்து வளம்பொலிந்து நன்றாக வாழ்வுயரும்! ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுபட்டு உழைப்பவர்க்குப் பாரிடமே சொந்தமென்று
காடுதனைத் திருத்தியதைக் களனியென ஆக்கிவிட
மாடெனவே தன்னுழைப்பை மனமுவந்தே கொடுத்துவிட
வீடுவந்தே சேருமன்றோ விளைநிலத்துச் செல்வமெல்லாம்

விளைச்சலாலே நிலங்களெல்லாம் வளம்பெருக வேண்டுமென்றும்
சளைத்தலென்ப தில்லாதாய் சகலருமே உழைக்கவேண்டும்
களைப்பின்றிக் களத்துமேட்டில் காற்றுவரத் தூற்றிவிடத்
தழைத்துவரும் பொருண்மியமும் தரணிவளம் செழித்துவரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழவனின் உளத்தோடு ! (நேரிசை வெண்பா)
### ஆக்கம்: கவிஞர் வாணிதாசன், கனடா



ஒட்டும் வயிற்றுக் கொருவாய் உணவேனும்
கிட்டிய போதும் கொடுக்காதோர் - முட்டிய
வங்கிக் கடனிலே வாழ்பவர் ஆனாலும்
பொங்குமே இன்பம் பொலிந்து!

மழையினை நம்பியே மண்ணை உழுது
விளைவினை நம்பியுயிர் வாழ்வான் - விளைநில
மெங்கும் விதைகள் முளைத்திடக் கண்டதும்
பொங்குமே இன்பம் பொலிந்து!

மேகம் கறுத்துவர மின்னல் மழைபொழியச்
சோகம் மறந்தேதம் சோர்வொழிப்பார் - போகமும்
பொங்கி விளைந்துவரும் போகும்தம் துன்பமென்றே
பொங்குமவர் உள்ளம் பொலிந்து!

காலத்தை நேரத்தைக் கண்களாய்க் கொண்டேதம்
கோலத்தை மாற்றாக் குணமுடையார் - சீலமும்
தங்கும் அழகில் தரணி செழித்துவரப்
பொங்குமே இன்பம் பொலிந்து!

நாளும் பொழுதுமே நாளை நிலைதேடி
வாழும் உழவர் வளம்பெருக - வீழுகின்ற
தண்புனலால் நெல்வயலின் தாகம் தணியுமெனில்
பொங்குமே இன்பம் பொலிந்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவா! உழவ னிருளி லிருந்தால்
நிறையா துலகம் நெகிழும் - குறையிலா
தெங்கும் வளம்பெருகி ஏருழவ னேற்றமுறின்
பொங்குமே இன்பம் பொலிந்து!

**கவிதை**

எங்கெல்லாம் நன்மை நலிந்து தீமை செழிக்கிறதோ அங்கெல்லாம் கவிதை அவதாரம் கொள்கிறது. எங்கெல்லாம் கௌரவர்கள் அணிதிரள்கிறார்களோ அங்கெல்லாம் கவிதை காண்டீபமாகிறது. எங்கெல்லாம் சீதைகள் சிறைப்படுகிறார்களோ அங்கெல்லாம் கவிதை படையெடுத்துச் செல்கிறது. எங்கெல்லாம் பாஞ்சாலிகள் துகிலுரியப்படுகிறார்களோ அங்கெல்லாம் கவிதை ஆடை வழங்குகிறது. எங்கெல்லாம் கோவலர்கள் கொலை செய்யப்படுகிறார்களோ அங்கெல்லாம் கவிதை கண்ணில் கனன்ற பொறியோடு வழக்காடச் செல்கிறது. எங்கெல்லாம் பசிக்குரல் எழுகிறதோ அங்கெல்லாம் கவிதை அமுதசுரபியாகிறது.

கவிக்கோ அப்துல் இரகுமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிமை

**ஆக்கம்- கவிஞர் விமலாதேவி புஸ்பநாதன், கனடா**



சொந்த பந்தங்கள் சோர்வின்றி இணைந்து
பார்புகழப் பயணிக்கும் இணையில்லா உறவுகள்
அன்போடு அரவணைத்துப் பண்போடு உறவாடி
தனிமை என்னும் வெறுமை போய்
தேன் தமிழாய் இனிக்கும்!
கூடி வாழ்ந்த ஒருகூட்டுப் பறவைகள்
பாடித்திரிந்து பலகாலமாய்
நாடிப் பலவீட்டுப் பறவைகளாய்
தனித்தனியாய்ப் பிரியும் போது
தனிமைதரும் கொடுமையால் துடிப்பர்!
கருத்தொருமித்து இணைந்த சோடிகள்
காலமெலாம் ஈருயிராய் கீதம்பாடி
காலக்கெடுதியால் கருத்தழிந்து போக
கானல் நீராய் கனவாகும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமை தன்னிலை மறந்து தவிக்கும்!
தனிமையில் தனியராய் தவித்த தருணம்
துணிவு தன்னகத்தே துணையாக நிற்க
நம்பிக்கை உரமாகித் தடைகளை உடைக்க
தலைநிமிர்ந்து கம்பீரமாய் நடக்க
தனிமை கடிந்து இனிமையாக்கும்!
நினைப்பவை நிறைவேறா வேளை
நினைக்காதவை நிகழும் போதெல்லாம்
நீக்கமற நிறைந்தவனை நினைத்து
நிலையான இன்பத்தைத் தனதாக்க
தனிமை தரும் தனியின்பம் தவமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டாம் பூச்சி (நிலைமண்டில ஆசிரியப்பா)

ஆக்கம் - கவிஞர் ஹேமா சுஜானந், கனடா



கூட்டுப் புழுவே குடம்பி உருவே
முட்டையில் பிறந்த மூன்று நிலையே
குட்டிப் புழுவாய்க் குவிந்த வுன்னுடல்
பட்டாம் பூச்சியாய்ப் பறப்பதைப் பாராய்
வட்ட விழியே வண்ணம் நூறே
தொட்டுனைத் தூக்கத் துடிக்குது நெஞ்சே
பொட்டுப் பொட்டாய் பொலிந்த அழகால்
சிட்டே நீயென் சிந்தை கவர்ந்தாய்
வண்ண மலரில் வாட்டம் நீங்கச்
சின்னக் காலால் சிறிதே நடந்தாய்
எட்டி யுன்னை என்கை தொட்டால்
பட்டுடல் உதிர்ந்து பாழ்படு மென்றே
தொட்டிட மறுத்துத் தூரமாய் நின்று
மட்டிலாக் காதல் மனதில் கொண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன வண்ணச் சிறகின் அழகைக்
கண்கள் பனிக்கக் களிப்புடன் பார்த்தேன்
பட்டே யுன்னைப் பார்த்த மனமோ
செட்டை கேட்டது சேர்ந்து பறக்க!
கற்பனை வானில் கண்களை மூடிக்
கட்டினேன் உன்மேல் காதற் கவிதை
கொட்டுது மழைபோல் கொஞ்சும் தமிழால்
சொக்கிப் போனேன் சோகம் மறந்தே!

எவ்வளவுக்கெவ்வளவு உணர்வைத் தீண்டாமல்
அறிவுடன் கவிஞன் பேசுகின்றானோ
அவ்வளவுக்கவ்வளவு அவனது கவிதை
வசனமாகிவிடும். கவிதையாக இருந்தால் வசனமாக
இருக்கமுடியாது. வசனமாக இருந்தால் அது
கவிதையாக இருக்கமுடியாது.

கவிஞர் வல்லிக்கண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்ற குளமும் அறுநீர்ப் பறவையும்

**ஆக்கம் - இரா. சம்பந்தன், கனடா**



வான் நிலவு கீழிறங்கி வந்து விளையாடுகின்ற மீன் திரியும் வாவியது. கொட்டிக் கொடியும் கொடி பிடிக்கும் தாமரையும் கட்டிப் பிடித்தங்கே கதைபேசும் நெய்தலுமாய் எட்டிப் பார்ப்போர்க்கு எழில்காட்டும் குளமதிலே பெட்டைப் பறவையினப் பேடுகளும் அவையோடு தொட்டுக் கதைபேசித் துள்ளும் ஆணினமும் குட்டிச் சிவப்பும் குயில் போல இளங்கறுப்பும் தட்டில் கரைத்தெடுத்த தயிர் போன்ற வெண்மையிலே இட்டுத் தெளித்தெறிந்த இளமஞ்சள் சந்தனமாய்ப் பட்டுச் சிறகிடையே பலவண்ணப் புள்ளிகளும் கட்டிக் கொண்டங்கே குரல் காட்டும் குஞ்சுகளும் என்று பறவைக் குடும்பங்கள் பல வாழும் நீருலகம்.

கூரலகைப் பாறையிலே குனிந்து சில தேய்க்கும். வேரலகு நாணலுக்குள் விரைந்து சில ஒளிக்கும் நீரலகு அலைகளுக்குள் நீந்தும் சில இன்னும். ஏருழவுபோற் காலால் சேற்றைச் சிலமிதிக்கும். ஊரரவம் போதுமென உறங்கும் சில அங்கே. ஆருமற்ற சிலவிடத்தில் ஆண்கூடும் அதிலும் சில.

நாடு விட்டு நாடு செல்லும் நடுக்காட்டு வழியினிலே வாடி விட்ட முகம் மலர நடனமிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்கையினைத் தேடிவந்து தான் பார்ப்பாள் அந்தத் தென்நாட்டின் தமிழ்க்கிழவி. மூதுரையின் பேராலே மூன்றுநிலத் தமிழரசை தீதகற்றிக் காப்பாற்றும் தெய்வத் திருமடந்தை ஔவை எனும் பெயர் கொண்டாள். சுட்டபழம் வெண்டுமென்று சுவாமியிடம் கேட்டதனால் சூடுபெற்றுப் பின் வாழ்வில் கெட்டதெலாம் தீண்டாத கேடற்ற உருவத்தாள்.

கரையெங்கும் நாணலது கைகோர்த்து அரண் செய்ய அங்கு நிரை செய்து தவளையினம் நெடுந்தாளில் ஒளித்திருக்க நுரைபொங்கும் நீர்ப்பரப்பில் மீன் நடத்தும் திருக்கூத்தை நரைகொண்ட தன்தலையில் நடுங்கும் கைசாத்திப் பறவைக்குலம் இரை கொள்ள இதையெல்லாம் இறைவனவன் ஏன் படைத்தான் என்பாள் கிழவியவள். என்றாலும் பார்த்திடுவாள். இதயம் மகிழ்ந்திடுவாள்.

காலமெலாம் தாமரையும் தண்ணீரும் மீன்களுடன் கோலமிட்ட பறவைகளும் குவிந்திருந்த பொய்கையது. ஒரு காலம் வானம் பொய்த்து வழியெல்லாம் மரம் செத்து நாணல் சரிந்து நாற்புறமும் புதர் மண்டிப் பொருந்திக் கிடக்கப் பொல்லாத பறவையெலாம் விருந்தைத் தேடி வேறுகுளம் ஓடிவிடப் பருந்தின் இறக்கையெனப் பழுத்துவிட்ட இலைகளுடன் வருந்தி நீருக்காய் வாழ்விழந்து தவமிருக்கும் நீர்க் கொடிகள் கண்டாள். நெடுந்தமிழின் ஆச்சியவள்.

நீரில்லைக் குளத்தில். நின்று பிடிப்பதற்கும் மீனில்லை அதனாலே பறவையெலாம் அந்த ஊரில்லை என்பதனை கிழவி உளம் கொண்டாள். பலன் கிடைத்த காலமெல்லாம் படிந்திருந்து பின்நாளில் வளமிழந்த குளம் விட்டுப் பறவையெலாம் போனாலும் நீர்க் கொடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவில்லை. அதையும் நினைத்தாள் ஔவையவள் கணப் போதில்.

ஆதாயம் இருந்தால் அருகிருந்து சுவைத்துவிட்டு அதிலேதும் குறைவந்தால் அகன்றுவிடும் தன்மையெலாம் அழகான உறவா? அழுக்கான உறவன்றோ! கூடி இருந்தவர்க்குக் குறை வந்தால் ஓடாமல் வாடி அவரோடு வாழ்ந்திருத்தல் அது தானே உறவு முறை. தேடிவந்து கையுதவும் உடையவிழும் தருணத்தில். வாடிநின்று கண்பனிக்கும் வளருடம்பு நோய்கண்டால். கூடிநின்று ஈரடியால் கூவிநின்று குறள் உரைத்தும் நாடியந்த வார்த்தைகளை நம்சனங்கள் உணர்ந்ததில்லை.

பகுத்தறிவு இல்லாத பறவைகள் தான் என்றில்லை சில வகுத்துரைக்க முடியாத மானுடரும் அப்படித்தான். நல்ல இடம் என்றால் நாலுமுறை வருவார்கள். நன்மை கிடைக்கும் என்றால் நாள் முழுதும் இருப்பார்கள். கிடைக்கும் பலன் குறைந்தால் கிட்ட நெருங்கார்கள். எட்டிப் போய் விடுவார் எத்தனையோ பொய் சொல்லி. காலம் மாறும். கலைந்ததெலாம் கூடாகும். கோலம் குலைந்ததெலாம் கோபுரமாய் எழுந்துவிடும் என்பதெலாம் நினையார்கள். எழுந்தே போய்விடுவர்!

தண்ணீர் குளம் தந்த தண்பொழுதில் அழகாகக் கண்ணில் தெரிந்த நீர்க்கொடிகள் இன்றைக்கு மண்ணில் நீர்வற்றிக் குளம் கிடக்கும் போதினிலும் அகலாமல் தாமும் அதனோடு அருகிருந்து துன்பம் சுமந்து குளம் போல அழகிழந்து சாவதனைப் போலன்றோ சரியான உறவமையும். துன்பத்தில் கைவிடாத் துணையன்றோ மெய்யுறவு. பாடவேண்டும் இதை நான் பழுதான உறவகல. கேடுகெட்ட நெஞ்சமெல்லாம் கீழிருந்து மீண்டுவர. ஏடெடுத்தாள் கிழவி. எழுதினாள் இப்படித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்**

**உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்திற்**

**கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே**

**ஒட்டி யுறுவார் உறவு. (ஔவையின் வாக்குண்டாம் - பாடல் 17)**

அற்ற குளத்தில் - முன்பு நீரால் நிறைந்திருந்து பின்பு நீர் வற்றிப்போன குளத்திலே

அறுநீர்ப் பறவை போல் - அந்த நீர் இருக்கும் போது ஓடிவந்து மீனுண்டு மகிழ்ந்து வாழ்ந்துவிட்டு பின்பு இரை இல்லாமல் போக அந்தக் குளத்தை விட்டு நீங்கிப் போகும் பறவைகள் போல

உற்றுழித் தீர்வார் உறவல்லர் - ஒரு மனிதனோடு கூடியிருந்து நன்மை பெற்று அனுபவித்துவிட்டு அவனுக்கு வறுமை வரும்போது கைவிட்டுச் செல்பவர்கள் உண்மையான உறவுள்ளவர்கள் ஆகமாட்டார்கள்.

அக்குளத்தில் - அந்தக் குளத்திலே

கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலுமே - நீர் இருந்த போது செழித்து வளர்ந்து சிறப்புற்றிருந்த கொட்டி ஆம்பல் நெய்தல் போன்ற கொடியினங்கள் எங்கும் ஓடிவிடாது நீரற்ற காலத்திலும் குளத்தோடு இருந்து தாமும் வாடி அந்தத் துன்பத்தைப் பங்கு போட்டு அனுபவிப்பது போலத்தான்

ஒட்டி உறுவார் உறவு - உள்ளன்போடு கூடிவாழும் உறவுகளும் இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்திடும் கனவுகள்

**ஆக்கம் - கணபதிப்பிள்ளை விக்னேஸ்வரன், தமிழ் முதுகலை, கனடா**



சேவலின் கூவல் அதிகாலை எனக் கூறியது. சோம்பல் முறித்து எழுந்தான் முருகேசு. காலைக்கடன் முடித்து, தயாராக வைத்திருந்த கோப்பியை இரசித்துக் குடித்து விட்டுத் தன் தோட்டத்திற்கு புறப்பட்டுச் சென்றான் அந்த ஏழை விவசாயி. அவன் நண்பன் வரும்வரை தனியாக வேலை செய்தவனுக்கு இருந்தாற் போல் அவனின் கடந்த கால வாழ்க்கை அவன் மனத்திரையில் வட்டமிட்டது.

முருகேசு ஓர் ஏழை விவசாயியின் மகன். பள்ளிப் பருவத்திலே தந்தையை இழந்தவன். குடும்பப் பாரத்தைச் சுமப்பதற்காகப் படிப்பை நிறுத்திவிட்டுத் தந்தை செய்த விவசாயத் தொழிலைத் தான் ஏற்றுக் கொண்டான்.

திடகாத்திரமான அவனது வாலிப உருவம் அவனது தோட்டத்திற்கு அருகில் தினமும் செல்லும் பணக்காரப் பள்ளி மாணவி மேனகாவைக் கவர்ந்து கொண்டதில் ஆச்சரியமில்லை. பெயருக்கேற்ப மேனகாவும் அழகிதான். அவளிடமிருந்து கடிதங்களும் பரிசுப் பொருள்களும் அவனுக்குக் கிடைத்தன. ஆனால் அவனால் எதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமாற முடியவில்லை. அதற்கு அவனது ஏழ்மையும் மிகக் குறைவான கல்வியறிவும் காரணமாக இருந்தன. இருந்தாலும் தன் கண்களால் நன்றியையும் அன்பையும் வெளிப்படுத்திக் கொண்டு கனவு வாழ்க்கையில் மிதந்து மகிழ்வான்

இவ்வாறாகக் காலங்கள் கடந்தன. ஒரு நாள் அன்ன நடை பயிலும் மேகனா வேகமாக வந்து அவன் கையில் ஓர் காகிதத் துண்டை திணித்து விட்டு அவனைத் திரும்பியும் பாராமல் விரைந்து மறைந்தாள். அதனைப் பிரித்துப் பார்த்த முருகேசு பொத்தென்று கீழே அமர்ந்து சாய்ந்து விட்டான்.

"டேய் மச்சான்! நீ களைத்து விட்டாய் கொட்டிலுக்கை போய் கொஞ்ச நேரம் படு. நான் மிச்சத்தைக் கொத்துகிறேன்" என்னும் அவன் நண்பனின் குரல் அவனை எழுப்பியது.

கடிதத்தில் "என்னை மறந்துவிடு" என்று மாத்திரம் எழுதியிருந்தது. அதன் பின் அவளைக் காணவில்லை. அவளைச் சந்திக்க அவன் எடுத்த எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை. கலங்கி நின்றான் முருகேசு

ஓரிரு மாதங்களில் அவளுக்குத் திருமணம் நிச்சயம் ஆகிவிட்டதாம், என்னும் செய்தி அவன் காதுகளில் கூரிய அம்புகளாகப் பாய்ந்தது. உடைந்த கோபுரமானான் முருகேசு.

பணக்கார வீட்டுக் கலியாணம், வெளிநாட்டு மாப்பிள்ளையுடன் கோலாகலமாக நடந்தது. கண்ணீரும் கம்பலையுமாக எட்ட நின்று பார்த்த முருகேசு "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல் ஆசைப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக் கோட்டை கட்டி விட்டேனே" என மனம் புழுங்கினான்.

அதன்பின் அவன் தோட்டத்தில் வேலை செய்யும் போது அத்தெருவால் செல்லும் இளம் தம்பதியினரை, மேனகா தம்பதியினரோ என உற்றுநோக்கிக் கண்கலங்கி நிற்பான். இதைக் கண்ட இவனின் நல்ல மனம் கொண்ட தாய்க்கு, முருகேசு திருமண வயதைக் கடந்து நிற்கிறான் என்பது மனதை உறுத்தியது.

தன் மாடான உழைப்பினால் சென்ற வருடம் தன் தமக்கையைக் கரைசேர்த்தான். ஓர் செல்லத் தங்கையும் இருக்கிறாள். அவள் படிப்பபை முடிக்கட்டும் பின்பு பார்ப்போம் என்று எண்ணிய பாசமிகு தாய் அவனுக்குப் பெண் பாரக்கத் தொடங்கிவிட்டாள். தாய் கொண்டுவரும் எல்லாச் சம்பந்தங்களையும் தன் தங்கையின் படிப்பையும் அவள் திருமணத்தையும் சாட்டி மறுத்து நின்றான். அவனது காதல் இதுவரை எவருக்குமே தெரியாது. மிகக் கண்ணியமான இரகசியக் காதல் இரகசியமாகவே மறைந்து சென்றது. முருகேசு படிப்பறிவு குன்றியவனானாலும் நற் சிந்தனைகள் கொண்ட பண்பாளன்.

மேனகாவை தன் மனதில் இருந்து அகற்ற முடியாமல் தவித்தான். அம்மா சொல்வது போல் வேறு பெண்ணைக் கலியாணம் செய்யவும் அவன் மனம் இடங் கொடுக்கவில்லை. தன் தோட்ட வேலைகளைச் சரியாகச் செய்து தன் தங்கையைப் படிக்க வைத்து ஓர் டாக்டர் ஆக்கலாம் என்று கனவு கண்டபடி தன் வேலைகளைக் கவனித்தான்.

ஒரு மாலைப் பொழுதில் சற்று ஓய்வாகக் கொட்டிலுக்குள் படுத்தபடி தங்கையின் படிப்புக்கான செலவுகள் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தவன் தாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலறல் கேட்டு திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். "உன் செல்லத் தங்கச்சி மோசம் செய்துவிட்டாளடா. செல்லப்பரின் பெடியனோடை ஓடிப் போய்விட்டாளடா" என்றபடி தன் தலையில் ஓங்கி அடித்தாள்.

ஆவேசமாக எழுந்த முருகேசு கண்கள் சிவக்கத் தன் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு அவளைத் தேடப் புறப்பட்டவனைத் தடுத்து நிறுத்திய தாய் "போகாதே முருகேசு! போன நாய் போகட்டும், என் வீட்டுக்கு இனிமேல் அது வேண்டாம். நீ அவளைக் கூட்டி வந்தால் என்னை பிணமாகத்தான் பார்ப்பாய்" என்றாள். செய்வதறியாது நின்றான் முருகேசு.

நாட்கள் நகர்ந்தன ஒரு நாள் மாலை மன ஆறுதலுக்காகப் படம் பார்க்கலாம் என்று ஊர்த் தியேட்டருக்குச் சென்றான். அங்கே நின்ற அவ்வூரார் எல்லோர் வாயிலிலும் "மேனகாவைத் திருமணம் செய்து கொண்ட வெளிநாட்டு மாப்பிள்ளை அவளை வந்து அழைத்துச் செல்லவில்லை. அவள் ஓர் பெண் குழந்தையை பெற்றெடுத்துள்ளாள். அவளின் தந்தை ஏமாற்றத்தினால் மாரடைப்பால் மரணமானார், அவரின் மரணத்தால் தாயாருக்குப் பித்துப் பிடித்து விட்டது" என்னும் ஊர் வம்பே அடிபட்டது.

மன ஆறுதலுக்குப் படம் பார்க்கச் சென்றவனுக்கு மீண்டும் இடி. அன்று இரவு நித்திரை வராமல் மேனகாவின் வாழ்வை எண்ணிக் கலங்கினான். மேனகாவைச் சந்தித்து ஆறுதல் கூறலாமா என பல தடவைகள் சிந்தித்தான். கணவன் அருகில் இல்லாத போது அவளைச் சந்திப்பதால் ஏற்படும் களங்கத்தையும் எண்ணினான். அம்மாவிடம் தன் காதலைக் கூறி, மேனகாவை இரண்டாம் திருமணம் செய்து கொள்ளலாமா என எண்ணியபடி உறங்கியவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவில் அவள் வந்து தன்னை அணைத்து முத்தமிடுவதாய்க் கனாக் காணவும், காலைச் சேவல் கூவவும் சரியாக இருந்தது. சினந்து எழுந்தான். கோழியைக் கோபிக்க முடியுமா?. அது தன் கடமையைச் செய்தது.

காலையில் அம்மா உணவு கொண்டு வரும் போது மேனகாவை மறுமணம் செய்வதைப் பற்றிக் கதைக்கலாம் என எண்ணிய வண்ணம் பயிர்களுக்கு நீர் பாய்ச்சினான். அத்தருணம் அவ் வழியால் வந்த முதியவர் "தம்பி உனக்குச் சங்கதி தெரியாதோ?. வட்டிக் கடைக்காரனின் பெடிச்சி எல்லே ரெயிலுக்கை விழுந்து செத்துவிட்டாள். சனமெல்லாம் போய்ப் பார்க்குது" என்றதுதான் தாமதம், தலையே ரெயிலுக்குள் அகப்பட்டது போல் இருந்தது அவனுக்கு.

மயக்கத்தில் நின்ற முருகேசுவைப் பார்த்து, "தம்பி! என்ன மலைச்சுப் போனாய் தண்ணி உடைச்சுப் பாயுதெடா பார்த்துக் கட்டு. அது ஊரைக் கொள்ளை அடித்த பாழாய்ப் போன குடும்பம். பாழாய்த்தான் போகும்" என்னும் முதியவரின் குரலைக் கேட்டு அவன் சுயநினைவுக்குத் திரும்பினான்.

அவனது கனவுகள் அனைத்துமே கலைந்து போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













2023 ஆம் ஆண்டு
கவிச்சரம் இதழ் 4
வெளியீட்டு விழாவில்
கனடாத் தமிழ்க் கவிஞர்
கழகத்தால் பாவலர்
விருது வழங்கிச்
சிறப்பிக்கப்பெற்றவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





19. 05 .24 அன்று நடைபெற்ற அமரர் கவிநாயகர் கந்தவனம் ஐயா அவர்களது நினைவேந்தல் நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






28. 01. 2024 அன்று நடைபெற்ற அமரர் அருட்கவி ஞானகணேசன் அவர்களது நினைவேந்தல் நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தைப்பொங்கல் - தமிழ் மரபுத் திங்கள் விழா - தை 2023




கவிச்சரம் 4 வெளியீட்டு விழா 2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அமரர் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களுக்கு இதய அஞ்சலி

இலக்கிய வித்தகர் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்கள் 2024-03-11ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். செந்தமிழையும் சிவநெறியையும் உலகறியச் செய்த பெருமகன். கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர், நடிகர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். வானொலி, பத்திரிகை, கவியரங்கம், பட்டிமன்றம் மூலம் அனைவராலும் நன்கு அறியப்பட்டவர். தமிழ்க் கவிஞர் கழகத்தை அமைத்து, அதன் காப்பாளராகவும், ஆசிரியராகவும் பணியாற்றிப் பல மரபுக்கவிஞர்களை உருவாக்கியவர். அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அமரர் கவிநாயகர் கந்தவனம் ஐயா அவர்களுக்கு எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அமரர் பாவலர் அருட்கவி ஞானகணேசன் தம்பிஐயா அவர்களுக்கு இதய அஞ்சலி

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் முன்னாள் தலைவர் அமரர் பாவலர் அருட்கவி ஞானகணேசன் தம்பிஐயா அவர்கள் டிசம்பர் 27, 2023 காலை சிவபதம் அடைந்த செய்தியானது எங்கள் எல்லோருக்கும் அதிர்ச்சியையும், ஆழ்ந்த துயரத்தையும் ஏற்படுத்தியது. கனடாத் தமிழ்க் கவிஞர் கழக வரலாற்றில் அவரது பங்களிப்பும், கவிபுனையும் திறனும், நட்பின் மகிமையும் அழியாத இடத்தைப் பெற்றுக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை. அமரர் அருட்கவி ஞானகணேசன் அவர்களுக்கு எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் – செயற்குழு*

முன்வரிசை (இடமிருந்து வலம்) - திருமதி இராஜ்மீரா இராசையா (துணைத்தலைவர்), திரு சண்முகராசா சின்னத்தம்பி (பொருளாளர்), திரு குமரகுரு கணபதிப்பிள்ளை (தலைவர்), திருமதி பவானி தர்மகுலசிங்கம் (செயலாளர்), திருமதி சுகந்தி மார்க்கண்டு (துணைச் செயலாளர்)

பின்வரிசை (இடமிருந்து வலம்) - (செயலவை உறுப்பினர்கள்) திருமதி இறாஜினி சுபாகரன், திரு அகணி சுரேஸ், திரு கந்த. ஸ்ரீபஞ்சநாதன், திரு மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை, திரு சயந்தன் பசுபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தைப்பொங்கல் - தமிழ் மரபுத் திங்கள் விழா - தை 2023




கவிச்சரம் 4 வெளியீட்டு விழா 2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REAL ESTATE SERVICES



## BUY - SELL - INVEST

## PROPERTY MANAGEMENT

**Leave the hassle of property management to us, trust our rental guarantee and ensure your property is maintained well.**

RIGHT AT HOME

RealtorGroup

For all your real-estate needs..

- Buy & Sell
- Investments in New Construction
- Mortgage / Re-Finance Arrangements
- Rental
- and more..



**Suthesan Pathmanathan**

REALTORS® / Mortgage Agent

305 Milner Ave Unit #301, Scarborough, ON M1B 3V4

**647-861-8240**

Brokerage :

1396 Don Mills Rd, Unit B121, Toronto ON M3B 0A7

Phone : 416-391-3232

647-861-8240 psuthesan@gmail.com www.realtorgroup.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org